
# இஸ்லாமும் ஆசிரியமும்



கலாநிதி யூசுப் அல் கர்ளாவி

தமிழில் : அஷ்ஷெய்க் ராஷித் யஹ்யா (நளீமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M. R. Mahammadu Tharik.
1023 A Police station Road,
Sammanthurai.
20170801

# இஸ்லாமும் ஆசிரியமும்

அஷ்ஷெய்க் ராஷித் யஹ்யா (நளீமி)

வெளியீடு

நளீமிய்யா வெளியீட்டுப் பணியகம்

பேருவலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M. K. Mahammadu Thaik.
1073 A police station Road,
Sammanthurai,
2019 08 01

Book : IslamUm Aasiriyamum
(Makaanathul Muallim Fil- Islam)
Author : Ash. Sheik Raashid Yahya (Naleemi)
First Edition : 2017
Published by : Naleemiah Islamic Publication
Beruwala, Sri Lanka.
Tp. 0778328898 E-Mail: ibro888@gmail.com
Copy Right : Author
Tipeset by : M.R.M. Musammil
Pages : iiiv +52

Price : Rs: 130/=

Printed by : Millennium Graphics
No.30/7, 5th Lane, Ambagahapura,
Maharagama.
0777 395057

நூல் : இஸ்லாமும் ஆசிரியமும்
(மகானதுல் முஅல்லிம் பில் இஸ்லாம்)
ஆசிரியர் : அஷ்ஷெய்க் ராஷிட் (நளீமி )
முதற் பதிப்பு : 2017
வெளியீடு : நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்
பேருவலை.
பதிப்புரிமை : ஆசிரியருக்கு
கணனி வடிவம் : எம்.ஆர்.எம். முஸம்மில்
பக்கங்கள் : viii + 52

விலை : ரூபா 130.00

அச்சகம் : மிலேனியம் அச்சகம் - மகரகம
0777 395057



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


## 1. இஸ்லாமும் ஆசிரியமும்

- மு'மின்கள் சந்தித்துக் கொள்வதன் அவசியம்
- ஆசிரியர் இறைத்தூதரின் பிரதிநிதி
- தஸ்கியாவும் கற்பித்தலும் இணை பிரியாதவை
- தஸ்கியாவுக்கும் தர்பியாவுக்குமிடையிலான வேறுபாடு
- தஸ்கியா என்றால் என்ன?
- தூதர் செய்த பணி எத்தகையது?
- தூதர் செய்த பணியின் விளைவு
- நபியவர்களின் கற்பித்தல் வழிமுறைகள்
- சிறந்த ஆசிரியரும் சிறந்த மாணவனும்
- இறை தூதரை முன்மாதிரியாகக் கொள்பவனே வெற்றிகரமான ஆசான்
- அறிவு தூதரின் வாரிசுச் சொத்து
- சமூகத்தின் தேவை: உண்மையான ஆசான்
- பாடசாலைக் கலைத்திட்டத்தில் காலனித்துவத்தின் செல்வாக்கு
- ஆசான்: கல்வித்துறையின் அச்சாணி
- ஆசிரியரின் ஆளுமைதான் கலைத் திட்டத்தின் செயலாற்றுகையைத் தீர்மானிக்கிறது
- மக்களுக்கு நல்லதைக் கற்பிப்பவரின் சிறப்பு
- மார்க்கத்தை கற்பிப்பதென்பது மார்க்க ரீதியான வழிகாட்டல்களோடு மாத்திரம் சுருங்கிய ஒன்றல்ல.
- படைப்பினங்களில் அல்லாஹ் ஏற்படுத்தி வைத்துள்ள விதிகள்
- ஆசிரியர் கருத்தொற்றுமையுடன் செயற்படல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சந்தேகங்களும் தெளிவுகளும்

- ஆசிரியரைக் கண்ணியப்படுத்துவது ஒரு சன்மார்க்கக் கடமை
- அல்குர்ஆன் ஆசானைக் கண்ணியப்படுத்துமாறு தூண்டுகிறது
- இஜ்திஹாதின் வாயில் திறந்துதான் இருக்கிறது
- பெண்களும் இளவயதுத் திருமணமும்

3. மரம் வளர்ப்போம்: மனிதம் காப்போம்

- உயிர்த்தியாகத் தாக்குதல்களா? தற்கொலைத் தாக்குதல்களா?
- இஸ்லாமிய கண்ணோட்டத்தில் அறிவென்பது மார்க்கமாகும், மார்க்கம் என்பது அறிவாகும்.
- பல் துலக்குவதற்கு கட்டாயம் 'அராக்' குச்சிதான் தேவையா?
- அறிவைத் தேடுவோர் அறிவுக்குச் செய்ய வேண்டியவை
- அல்லாஹ்வுக்கு உவப்பான வழிகளில் நேரத்தைச் செலவழித்தல்
- வட்டிசார் வங்கிகளில் வேலை செய்தல்
- மாணவர்களைத் தண்டிப்பது இஸ்லாமிய வழிமுறையல்ல
- ஊரில் தங்கியிருப்பவர் தொழுகையைச் சேர்த்துத் தொழுதல்
- உருவச் சிலைகள் தடுக்கப்பட்டவையாகும்
- உனது தந்தைக்குக் கட்டுப்படு, உனது தாய்க்கு மாறு செய்யாதே!
- யுவதிகள் பல்கலைக்கழகத்தில் வுழூவுடன் இருத்தல்
- யுவதியின் விவகாரங்களுக்குப் பொறுப்பானவர் யார்?
- வுழூவின்றிய நிலையில் அல்குர்ஆனை ஓதுதல்
- உள்ளத்தில் தோன்றும் எண்ணங்கள், ஊசலாட்டங்கள் பற்றி விசாரிக்கப்படுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிபெயர்த்தோன் உரை

அளவிலாக் கருணையும் நிகரில்லா அன்பும் உடைய வல்லோன் அல்லாஹ்வின் பெயர் கொண்டு ஆரம்பிக்கிறேன்.

ஸலாத்தும் ஸலாமும் உலக முடிவு வரை இந்த உலகில் வாழ இருக்கின்ற அனைத்து மானிடப் பிறவிக்கும் ஜின் இனத்துக்குமான ஏக தலைவராகவும் மிகப் பெரும் ஆசானாக வும் திகழ்ந்து வழிகாட்டிய இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர் வழிநின்று அவரது சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக்கப் பாடுபடும் அனைவர் மீதும் உண்டாவதாக!

"இஸ்லாமிய அடிப்படை வாதம் - சில புரிதல்கள்" எனும் பெயரில் கலாநிதி யூசுப் அல் கர்ளாவியின் அல் உஸூலிய்யா லெ் இஸ்லாமிய்யா எனும் நூலை மொழிபெயர்த்ததுக்குப் பிறகு, "இஸ்லாமும் ஆசிரியமும்" என்ற பெயரில் அவரது இன்னொரு நூலை மொழிபெயர்த்து தமிழ் உலகிற்கு வழங்குவதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

கட்டார் பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தில் அதன் மாணவர் வெளிக்களச் செயற்பாட்டுப் பிரிவு 1996 மார்ச் 09ல் ஏற்பாடு செய்த நிகழ்வொன்றில் கலாநிதி யூசுப் அல் கர்ளாவி அவர்கள் நிகழ்த்திய உரையின் தொகுப்பே இந் நூலாகும். கல்விப் பீடத்தில் கற்றுக் கொண்டிருந்த மாணவிகளுக்கு மத்தியில் நிகழ்த்தப்பட்ட உரையுடன் சேர்த்து அவர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு முன்வைக்கப்பட்ட பதில்களும் உள்ளடங்களாக இந்நூல் அமையப் பெற்றுள்ளமை இதன் சிறப்பம்சமாகும். கல்விப்பணி தொடர்பாகவும் ஏனைய சில முக்கிய பொது விடயங்கள் தொடர்பாகவும் இந்நூல் அலசுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியம் என்பது ஓர் உன்னதமான பணி; மனித இனத்தின் வரலாறு தொட்டே பல்வேறு சமூகத்தாரிடமும் ஆசிரியர் முக்கிய கதாபாத்திரமாகத் திகழ்ந்து வந்துள்ளன. சில சமயங்களும் சமூகங்களும் ஆசிரியரை தெய்வத்தின் அந்தஸ்த்துக்கு உயர்த்தியுமுள்ளன. மாத்திரமல்ல கல்விக் கென்று தனியான கடவுள்களை வணங்கக்கூடிய சமூகத்தவர் களும் உலகில் இருக்கிறார்கள்.

இஸ்லாமிய மார்க்கம் ஆசிரியனுக்குரிய உயரிய இடத்தை வழங்குவதோடு ஆசிரியத்துவத்துக்குரிய நியாயமான அந்தஸ்த்தையும் வழங்குகிறது. அது இறைவனுடைய அந்தஸ்த்துக்கு ஆசிரியரை உயர்த்தி இறைவனுடைய அந்தஸ்த்தில் கை வைக்கவுமில்லை. ஒரு சாதாரண தொழில் முயற்சியாக ஆசிரியத்துவத்தை நோக்கி இழிவுபடுத்தவுமில்லை.

இஸ்லாம் கற்பித்தல் பணியை மிக உன்னத பணியாக நோக்குகிறது. கற்பித்தல் பணிதான் உலகிற்கு அனுப்பப்பட்ட நபிமார்கள் அனைவரினதும் ஏக பணியாக இருந்துள்ளதை அல்குர்ஆன் பல இடங்களில் குறிப்பிடுகிறது. இப்பணியில் ஈடுபடுவோருக்கு கிடைக்கின்ற அந்தஸ்த்தைப் பற்றி பல அல்குர்ஆனிய வசனங்களும் நபி மொழிகளும் பிரஸ்தாபிக்கின்றன.

ஆயினும் அண்மைக் காலமாக ஆசிரியப் பணியின் மகத்துவம் குறைத்து மதிப்பிடப்படுவதோடு அனைத்து கலைகளினதும் கலைஞர்களினதும் துறைசார் விற்பன்னர் களினதும் ஊற்றுக்கண் ஆசிரியர்கள்தான் என்ற உண்மையும் மறக்கப்பட்டு வருகிறது. அத்தோடு ஆசிரியர்கள் சமூகத்திட மிருந்து பெற வேண்டிய பல்வேறுபட்ட அங்கீகாரங்களையும் இழந்து வருகிறார்கள். சமூகத்திலுள்ள பல்வேறு தரப்பினர்களின் பலவீனங்களால் இந்நிலைமை ஏற்படுவது போன்று சில ஆசிரியர்கள் தமது கடமைகளைச் சரிவர உணர்ந்து மேற்கொள்ளாமையினாலும் இந்நிலை ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் உள்ள பொது மக்களாக இருக்கட்டும் ஆசிரியர்களாக இருக்கட்டும் யாராக இருப்பினும் ஆசிரியத்துவத்தின் மகிமையை அந்தஸ்த்தை, உணர்ந்து செயற்படும்போது ஆசிரியர்கள் தமக்கான நியாய பூர்வ அந்தஸ்த்தைப் பெறுவதோடு அவர்களால் இந்த சமூகம் பெறக்கூடிய விளைவும் உச்ச அளவில் கிடைக்கப் பெறும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

எனவே இஸ்லாம் ஆசிரியத்துவத்திற்கு வழங்கியுள்ள கண்ணியத்தையும் அந்தஸ்த்தையும் விளக்குவதனூடாக பொது மக்கள் மத்தியிலும் ஆசிரியர்கள் மத்தியிலும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந் நூலின் நோக்கமாகும்.

அத்தோடு சேர்த்து இந் நூலின் இரண்டாம் பகுதி ஆசிரியம் சம்பந்தமாகவும் ஏனைய சில நடைமுறை விவகாரங்கள் குறித்தும் சில மாணவர்களால் கேட்கப்பட்ட வினாக்களுக்கான விடைகளைத் தாங்கி வருகிறது. அவையும் வாசகர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நூலின் அரபு மூலத்தை கெய்ரோவைச் சேர்ந்த 'மக்தபது வஹ்பா' என்ற நிறுவனத்தினர் 2011ம் ஆண்டு வெளியிட்டு வைத்துள்ளனர். தற்போது இதன் தமிழ் மூலத்தை வெளியிட்டு வைக்க, முன்வந்து மொழிபெயர்த்துத் தருமாறு வேண்டிய ஜாமிஆ நளீமிய்யாவின் வெளியீட்டுப் பணியத்தாருக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை மொழிபெயர்க்குமாறு தூண்டிய நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகத்தின் முன்னாள் பொறுப்பாசிரியர் சகோதரர் அஷ்ஷெய்க் ரிஷாட் நஜிமுடீன் அவர்களுக்கும் மொழிபெயர்ப்புப் பிரதியை சரிபார்த்து திருத்தங்கள் செய்து செம்மைப்படுத்திய உஸ்தாத் அஷ்ஷெய்க் எம்.எப் ஸெய்னுல் ஹுசைன் ஆகியோரும் இவ்விடத்தில் நன்றிக்குரியவர்கள்.

கணனி வடிவமைப்புக்களை முனைப்புடன் செய்து தந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வெளியீட்டுப்பணிய நிர்வாக உதவியாளர் சகோதரர் எம்.ஆர்.எம். முஸம்மில் அவர்களையும் நன்றியுடன் நினைவு படுத்துகிறேன்.

இறுதியாக மானிட குலத்துக்கு நன்மை பயக்கும் இன்னுமொரு படைப்பில் உங்களைச் சந்திக்க வல்ல அல்லாஹ்விடம் உதவியை வேண்டியவனாக, இச் சிறு முயற்சியை அண்மையில் வபாத்தாகிய எனது அன்புத் தந்தை யூ.எல்.எம். யஹ்யா அவர்களின் பெயரில் சமர்ப்பணம் செய்து முடிக்கிறேன்.

இறை பணியில்

ராஷித் யஹ்யா (நளீமி)

2017. 06. 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ①

# இஸ்லாமும் ஆசிரியமும்

## மு:.மின்கள் சந்தித்துக் கொள்வதன் அவசியம்

ஸல்மானுல் பாரிஸி (ரழி) சொன்னார்கள்: மு:.மினான இரு சகோதரர்கள் இரு கைகளுக்கு ஒப்பானவர்கள்; அதில் ஒன்று மற்றையதைக் கழுவிவிடும். மேலும் எப்போது இரு மு:.மின்கள் சந்தித்துக் கொள்கிறார்களோ அப்போது அல்லாஹ் அவர்களில் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பிரயோசனத்தைப் பெற்றுக்கொடுத்து விடுகிறான்.[1]

எனவே மு:.மின்களின் சந்திப்பானது எப்போதும் நன்மையையே விளைவாகத் தரும். ஏனெனில் அது அல்லாஹ் வுக்காக மேற்கொள்ளப்படும் சந்திப்பாகும். இதனால்தான் அது நலவை மட்டும் தருவிக்கிறது. "வளமான பூமி தன் இறைவனின் கட்டளையைக் கொண்டு (செழுமையாகப்) பயிர் (பச்சை)களை வெளிப்படுத்துகிறது."[2] (இங்கு நூல் ஆசிரியர் மு:.மின்களின் சந்திப்பை வளமான பூமிக்கு ஒப்பிடுகிறார்.)

இஸ்லாம் கூறும் ஆசிரியப் பணி பற்றியும் ஆசிரியத்துவத் திற்கு இஸ்லாம் வழங்கியுள்ள பெறுமானம் பற்றியும் ஆரம்பத்தில் சிறிது அலசிவிட்டு இத்தலைப்பு சார்ந்ததும் பொதுவானதுமான சில சந்தேகங்களுக்கான தெளிவுகளை நோக்கிச் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் இறைத்தூதரின் பிரதிநிதி

ஆசிரியர் என்பவர் இறைதூதர் (ஸல்) அவர்களின் பிரதிநிதியாவர். அனைத்து இறைத்தூதர்களும் ஆசிரியர்களாகத்தான் இருந்துள்ளனர். அவர்களது பணி கற்பித்தலாகவும் இருந்துள்ளது. அவர்கள் நன்மாராயம் கூறுபவர்களாகவும் எச்சரிக்கை செய்பவர்களாகவும் இருந்துள்ளனர். இதுபற்றி அல்குர்ஆன் இவ்வாறு இயம்புகிறது: "தூதர்கள் வந்தபின் அல்லாஹ்வுக்கு எதிராக மக்களுக்கு (சாதகமாக) ஆதாரம் எதுவும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு தூதர்கள் (பலரையும்) நன்மாராயம் கூறுபவர்களாகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவும் (அல்லாஹ் அனுப்பினான்)"(3)

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாயலில் நுழைந்த போது ஒரு சாரார் அல்லாஹ்வை திக்ர் செய்து கொண்டிருந்தனர். இன்னுமொரு சாரார் இஸ்லாமிய சட்டக்கலை சார்ந்த விடயங்கள் சிலவற்றைப் பற்றி கருத்துப் பரிமாறிக் கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்து நபிகளார் (ஸல்) அவர்கள், "அனைவரும் நல்ல விடயங்களையே செய்து கொண்டிருக்கிறீர்கள். அல்லாஹ்வை திக்ர் செய்பவர்களோ அவர்களது இரட்சகனிடம் துஆ செய்வர். அவன் நாடினால் அவர்களுக்கு வழங்குவான் அவன் நாடினால் (வழங்காமல்) தடுத்தும் கொள்வான்" எனக் கூறிவிட்டு, மற்றவர்களைப் பார்த்து "அவர்கள் மக்களுக்கு கற்பித்து தாமும் கற்றுக் கொள்கிறார்கள். நிச்சயமாக நான் கற்பிப்பவனாகவே அனுப்பப்பட்டுள்ளேன்." எனக் கூறினார்கள்.(4)

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் பலவீனம் இருக்கிறது. இந்த ஹதீஸை விடவும் பலமான ஆதாரபூர்வமான பின்வரும் ஹதீஸே எமது கருத்தை வலுப்படுத்தப் போதுமானதாகும். "நிச்சயமாக அல்லாஹ் என்னைக் கஷ்டப் படுத்துபவனாகவோ வலிந்து கஷ்டத்தை உண்டாக்கிக் கொள்பவனாகவோ அனுப்பவில்லை. மாறாக அவன் என்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆசிரியனாக, இலகுபடுத்தக் கூடியவனாகவே அனுப்பியுள்ளான்'' (5)

நபியவர்கள் கற்பித்தலில் இலகு நடையைக் கையாண்ட ஓர் ஆசிரியராவர். எனவேதான் தனது உம்மத்தினரும் அந்த இலகு நடையைப் பின்பற்ற வேண்டும் எனப் பின்வருமாறு கற்றுத் தந்துள்ளார்கள்: "நீங்கள் இலகுபடுத்துங்கள்; கஷ்டப்படுத்தாதீர்கள். நன்மாராயங் கூறுங்கள்; விரட்டிவிடாதீர்கள்"(6)

நபிகளார் (ஸல்) அவர்கள் அபூமூஸா அல் அஷ்அரீ (ரழி), முஆத் பின் ஜபல் (ரழி) ஆகிய இருவரையும் யமன் பிரதேசத்துக்கு தூதுவர்களாக அனுப்பியபோது வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த உபதேசத்தைச் செய்தார்கள்: "நீங்கள் இருவரும் இலகு படுத்துங்கள், கஷ்டப்படுத்தாதீர்கள், நன்மாராயம் கூறுங்கள், விரட்டிவிடாதீர்கள், கட்டுப்படுங்கள், முரண்பட்டு விடாதீர்கள்."(7)

இவ்வாறுதான் நபியவர்களும் தோழர்களும் காணப்பட்டார்கள். நபி(ஸல்) அவர்களின் தூதுத்துவத்தின் மிக முக்கிய அம்சமாக வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்ற பணி அமைந்துவிடுவதாக அல்குர்ஆன் அடையாளப்படுத்துகிறது.

நபிகளார் (ஸல்) அவர்கள் ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியராக இருக்கின்ற அதே வேளை இஸ்லாமிய சமூகத்தின் முதன்மையான முன்னோடி ஆசிரியராகவும் திகழ்கிறார். தத்துவவியலாளர்கள் சொல்வதுபோல உலகின் முதல் ஆசான் அரிஸ்டோட்டில் அல்ல. முஸ்லிம்கள் கிரேக்க தத்துவஞான நூற்களை அரபு மொழிக்குப் பெயர்த்தபோது அரிஸ்டோட்டிலின் கருத்துக்களால் ஆகர்ஷிக்கப்பட்டு அவரை முதல் ஆசான் என்றழைத்தனர். அவரது சிந்தனைகளைக் கற்ற மாணவரான பாராபியை இரண்டாவது ஆசான் என அழைத்தனர். உண்மையில் அல்லாஹ்வின் தூதர்தான் முதல் ஆசானாக இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவன்தான் எழுத்தறிவில்லாத மக்களிடம் அவனுடைய வசனங்களை ஓதிக் காட்டி அவர்களைப் பரிசுத்தமாக்கி, அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்பிக்கும் படியான தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான். அவர்களோ அதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தனர்”[8] என்ற அல்குர்ஆனிய வசனம் இதனை உணர்த்துகிறது.

## தஸ்கியாவும் கற்பித்தலும் இணை பிரியாதவை

நபி(ஸல்) அவர்கள் மனிதர்களை வழிகேட்டிலிருந்து நேர்வழியின் பால் அழைத்துவந்தார்; இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியைக் காட்டிக் கொடுத்தார். “நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து பேரொளியும் தெளிவுள்ள (திருக் குர்ஆன் எனும்) வேதமும் உங்களிடம் வந்திருக்கின்றது”[9] என்று அல்குர்ஆன் இதனை விளக்குகிறது.

அல்குர்ஆன் நபியவர்களைப் பார்த்துப் பின்வருமாறு பிரஸ்தாபிக்கிறது: “நிச்சயமாக நீர் (மக்களுக்கு) நேரான பாதையில் வழி காண்பிக்கிறீர்”[10] எனவே, அவர்தான் நேர்வழி காட்டக்கூடிய ஆசான். அவர் வேதத்தையும் ஞானத்தையும் கற்பித்து உள்ளங்களைத் தூய்மைப்படுத்துகிறார். இதுவே கற்பித்தலும் தஸ்கியாவுமாகும். தஸ்கியா என்பது உள்ளத்துடன் தொடர்புறுகிறது. கற்பித்தல் என்பது மூளையுடன் தொடர்புறுகிறது. ஒரு மனிதன் தன் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தாமல் தனது தலையை மாத்திரம் தகவல்களால் நிரப்பிவிடுவது எந்த வகையில் பிரயோசனமளித்துவிடப் போகிறது? இதனால் தான் அல்குர்ஆன் தூதரின் பணியைக் குறிப்பிடும்போது கற்பிப்பதோடு சேர்த்து “அவர் அவர்களது உள்ளங்களைத் தூய்மைப்படுத்தி விடுகிறார்”எனக் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தஸ்கியாவுக்கும் தர்பியாவுக்குமிடையிலான வேறுபாடு

தர்பியா என்ற சொல் தற்காலத்தில் கற்பித்தல் என வழங்கப்படுகிறது. அதையும் தாண்டி- எனது பார்வையில்- கற்பித்தல், பயிற்றுவித்தல் என்ற விசாலமான கருத்தை விளக்குகின்ற சொல்லாக தஸ்கியா என்ற பதம் காணப்படுகிறது. அதே நேரம் தர்பிய்யா என்ற சொல் பௌதீக ரீதியிலான, உடலியல் ரீதியிலான பயிற்றுவிப்பைக் குறிப்பதற்காகவே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. பின்வரும் அல் குர்ஆன் வசனம் இதனை உணர்த்துகிறது. "என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்தபோது என்னை அவ்விருவரும் (பரிவோடு) வளர்த்தது போல் நீயும் அவர்கள் இருவருக்கும் கிருபை செய்வாயாக" எனக் கூறிப் பிரார்த்திப்பீராக"(11)

ஆனால் உள ஆற்றுப்படுத்தல், அறிவூட்டல், ஆன்மீகப் பயிற்சியை வழங்குதல், ஈமானிய, பண்பாட்டுப் போஷிப்பை வழங்குதல் என்பன தஸ்கியா என்ற சொல்லுக்கூடாகவே உணர்த்தப்படுகிறது.

## தஸ்கியா என்றால் என்ன?

தஸ்கியா என்ற சொல் 'ஸக்கா' என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். 'ஸக்கா', 'ஸகாத்' என்ற சொற்கள் அரபிகளின் மொழி வழக்கில் இரு கருத்துக்களில் வழங்கப்படுகிறது. ஒன்று தூய்மை, மற்றையது வளர்ச்சி. 'ஸக்கா' என்றால் தூய்மைப் படுத்தினான், வளர்த்தான் என்ற கருத்துக்களைக் கொடுக்கும்.

'ஸகா' என்ற வினைச் சொல் தூய்மையடைந்தது, வளர்ந்தது என்ற கருத்துக்களைக் குறிக்கும். எனவே இறைத்தூதர் இணைவைத்தல், நயவஞ்சகத்தனம், ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாஹிலிய்யப் பண்புகள் போன்ற அனைத்தினதும் மொத்த வடிவங்கிலிலிருந்தும் உள்ளங்களையும் உணர்வுகளையும் தூய்மைப்படுத்தினார். அவற்றுக்குப் பதிலீடாக ஏகத்துவம், உளத்தூய்மை என்பவற்றை அந்த உள்ளங்களில் விதைத்துவிட்டார். பொய் என்ற பண்பை நீக்கி உண்மை என்ற பண்பை வளர்த்தார். மோசடி என்ற பண்புக்கு மாற்றீடாக அமானிதம் என்ற பண்பை வளர்த்தார். இதுவே தஸ்கியா எனப்படுகிறது. ஒன்றை நீக்கி இன்னொன்றை வளர்த்தலை இது குறிக்கும். இதைத்தான் அல்குர்ஆன் இவ்வாறு சொல்கிறது: "ஆத்மாவின் மீதும் அதனைச் செம்மைப்படுத்தியவன் மீதும் சத்தியமாக அப்பால் அவன் அதற்கு அதன் தீமையையும் அதன் நன்மையையும் உணர்த்தினான். எவர் அதனைப் பரிசுத்தமாக்கி விடுகிறாரோ அவர் வெற்றியடைந்து விட்டார். எவர் அதனைப் (பாவத்தில்) புகுத்தி விடுகிறாரோ திட்டமாக அவர் தோல்வி அடைந்துவிட்டார்.[(12)] எனவே, தஸ்கியா என்பது உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி வளர்த்தலைக் குறிக்கிறது.

## தூதர் செய்த பணி எத்தகையது?

நான்கே நான்கு குர்ஆனிய வசனங்கள் தூதரின் பணியை மிகத் தெளிவாக வரையறை செய்து விட்டன. வேதத்தை ஓதிக் காண்பித்தல், உள்ளங்களைத் தூய்மைப்படுத்தி வளர்த்தல், கற்பித்தல் என்பனவே அவரது பணிகள்.

முதல் வசனம் பின்வருமாறு அமைகிறது: 'எங்கள் இறைவனே அவர்களிடையே உனது வசனங்களை ஓதிக் காண்பித்து அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களைத் தூய்மைப்படுத்தக்கூடிய ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைப்பாயாக நிச்சயமாக நீயே வல்லமை மிக்கோனாகவும் பெரும் ஞானமுடையோனாகவும் இருக்கிறாய்"[(13)] இதுதான் இப்றாஹீம் (அலை) அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் வரவிருந்த இஸ்லாமிய உம்மத்துக்காக செய்த பிரார்த்தனையாகும்.

இரண்டாவது வசனம்: "இதே போன்று நாம் எமது வசனங்களை உங்களுக்கு ஓதிக் காண்பிப்பதற்காகவும் உங்களைத் தூய்மைப் படுத்துவதற்காகவும் உங்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுப்பதற்காகவும் இன்னும் உங்களுக்குத் தெரியாமல் இருந்தவற்றை உங்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காகவும் உங்களிடையே உங்களிலிருந்து ஒரு தூதரை அனுப்பியுள்ளோம்."(14)

மூன்றாம் வசனம்: "நிச்சயமாக அல்லாஹ் மு'.மின்களுக்கு அருள் புரிகின்றான். அவன் அவர்களுக்காக அவர்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பி வைத்தான். அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கிறார். இன்னும் அவர்களைப் (பாவத்தை விட்டும்) பரிசுத்தமாக்குகிறார். மேலும் அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கிறார். அவர்களோ நிச்சயமாக இதற்கு முன் பகிரங்க வழிகேட்டிலேயே இருந்தனர்."(15)

நான்காவது வசனம்: "அவன்தான் எழுத்தறிவில்லாத மக்களிடம் அவனுடைய வசனங்களை ஓதிக்காட்டி, அவர்களைப் பரிசுத்தமாக்கி, அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்பிக்கும்படியான தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான். அவர்களோ அதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தனர்"(16)

## தூதர் செய்த பணியின் விளைவு

நபிகளார் கற்பித்தார்... உள்ளங்களைத் தூய்மைப் படுத்தினார்... புதியதோர் சமூகத்தைத் தோற்றுவித்தார். அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடி நாளங்களில் புதிய இரத்தத்தைப் பாய்ச்சினார். ஒவ்வொரு மனிதனுக்குள்ளிருந்தும் புதியதொரு பிறவியைத் தோற்றுவித்தார். உதாரணத்திற்காக உமர் பின் கத்தாப் என்ற மனிதரை எடுத்துக் கொள்வோம். ஜாஹிலிய்யாக் காலத்தில் சிலைகளை வணங்கி கொண்டிருந்தவர் அவர். இஸ்லாத்தில் நுழைந்தவுடன் அவரது போக்கு மாறிவிடுகிறது. கடுமையான உள்ளம் கொண்ட உமர் இரக்க சுபாவம் கொண்டவராக மாறிவிடுகிறார். ஜாஹிலிய்யாக் காலத்தில் ஒரு முறை 'அஜ்வா' என்ற ஈச்சம் பழத்திலான ஒரு சிலையை அவர் வணங்கிக் கொண்டிருந்தார். அப்போது அவருக்குப் பசி எடுக்கவே அந்த சிலையையே சாப்பிட்டு விட்டார். அப்படிப்பட்ட உமர் (ரழி) அவர்கள் இஸ்லாத்தில் நுழைந்த பின்னர் ஹஜ் செய்யும்போது ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிட்டுச் சொல்கிறார்: "நிச்சயமாக நீ எதுவித நன்மையோ எதுவித தீமையோ பயக்க முடியாத வெறும் கல் என்று எனக்கு நன்றாகத் தெரியும். எனினும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிடுவதை நான் கண்டிருக்காவிட்டால் உன்னை நான் முத்தமிட்டிருக்கவே மாட்டேன்"(17)

அவரது சிந்தனை சுதந்திரத்தை ஸ்பரிசித்துவிட்டது.... உள்ளம் தான் மூழ்கிப் போயிருந்த கடின ஜாஹிலிய்ய சித்தத்திலிருந்து வெளியேறி அன்பு எனும் கடலில் முத்துக் குளித்துவிட்டது... அவர் கிலாபத் பணியைப் பொறுப்பேற்ற பின்னர் கூறிய வார்த்தையின் ஆழம் இதனை உணர்த்துகிறது: "யூப்பிரடீஸ் நதிக் கரையில் ஓர் ஆட்டுக் குட்டி அநியாயமாக இறந்தால் அதற்காக அல்லாஹ் மறுமை நாளில் என்னை விசாரித்துவிடுவான் என நான் அச்சம் கொள்கிறேன்"(18) என்றார் உமர் (ரழி)

**இதுதான் நபித்துவக் கற்பித்தலின் விளைவு. முஹம்மதிய பயிற்றுவிப்பின் அறுவடை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நபியவர்களின் கற்பித்தல் வழிமுறைகள்

அந்த ஸஹாபிகள் அல்லாஹ்வின் தூதருடைய பாசறையில் வளர்ந்தார்கள். அவர்கள் கற்பதற்கென நாம் அனுபவிப்பது போன்ற அடுக்குமாடி வசதிகள் இருக்கவில்லை. கரும்பலகை வசதி இருக்கவில்லை. வெற்று மணற்தரைதான் கரும்பலகையின் பணியைச் செய்தது. நபியவர்கள் ஏதாவதொன்றை எழுதி விளங்கப்படுத்த முனைந்தால் மணலிலே கீறிக் காட்டுவார். ஒரு நாள் நபியவர்கள் மணற் தரையிலே ஒரு கோடு கீறி, இது அல்லாஹ்வின் நேரிய பாதையாகும் எனக் கூறிவிட்டு, அந்தக் கோட்டுக்கு இரு மருங்கிலும் கோணலான பல கோடுகளைக் கீறி, இவையும் சில பாதைகளாகும். இவை ஒவ்வொன்றின் ஆரம்பத்திலும் ஒரு ஷைத்தான் நின்றுகொண்டு அவனின் பக்கம் அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறான் எனக் கூறினார்கள். பிறகு, "நிச்சயமாக இதுவே எனது நேரான வழியாகும். ஆகவே இதனையே பின்பற்றுங்கள்- இதர வழிகளைப் பின்பற்ற வேண்டாம்- அவை உங்களை அவனுடைய (அல்லாஹ்வினுடைய) வழியை விட்டும் பிரித்து விடும். நீங்கள் (நேர்வழியை பின்பற்றி) பயபக்தியுடையவர்களாக இருப்பதற்கு இவ்வாறு அவன் உங்களுக்குப் போதிக்கிறான்"(19) என்ற வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

## சிறந்த ஆசிரியரும் சிறந்த மாணவனும்

இத்தகைய எளிய வசதிவாய்ப்புகள், வழிமுறைகளுக் கூடாகத்தான் நபியவர்கள் கற்பித்தலை மேற்கொண்டார்கள். அவர் மனிதர்களுக்காக அனுப்பப்பட்ட மிகச் சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்தார். நம்பிக்கை, பண்பாடு, நடத்தை, தியாகம் என்பவற்றில் சிறந்து விளங்கிய மனித இனத்தின் மிகச் சிறந்த பரம்பரையை அவர் பயிற்றுவித்துப் போஷித்தார். அவர்கள் தான் அல் குர்ஆனை மனனம் செய்து, பாதுகாத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு வழங்கியுள்ளார்கள். அவர்கள் தான் நபிகளின் வாழ்வின் ஒவ்வொரு அசைவையும் பாதுகாத்து எமக்கு அறிவித்துச் சென்றுள்ளார்கள். அவர்கள் தான் இஸ்லாத்தை உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் கொண்டு சேர்த்தார்கள். அவர்கள் தான் மனிதர்களுக்காக வெளியாக்கப்பட்ட மிகச் சிறந்த பரம்பரையினர். அவர்கள் முஹம்மத் (ஸல்) என்ற ஆசிரியரின் மாணவர்களாக இருந்தார்கள். இறைதூதர் (ஸல்) அவர்கள் ஆசான்களின் தலைவராக இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆசானும் அவரின் அறிவு,ஆளுமைப் பொக்கிஷத்தி லிருந்து பயன்பெற வேண்டியிருக்கிறது.

## இறை தூதரை முன்மாதிரியாகக் கொள்பவனே வெற்றிகரமான ஆசான்

இறைதூதரை முன்மாதிரியாகக் கொண்டு கற்பித்தல் பணியை ஒரு வணக்கமாகவும் ஒரு வகையான ஜிஹாதாகவும் கருதிச் செயற்படுபவனே உண்மையில் வெற்றிகரமான ஆசானாவான்.

கற்பித்தல் பணி என்பது அதற்கேயுரிய முறையில் நிறைவேற்றப்படும் போது அது ஒரு வணக்கமாகவும் அல்லாஹ்வின் பாதையில் மேற்கொள்ளப்படும் ஜிஹாதாகவுமே நோக்கப்படுகிறது. அறிவில் ஒளியேற்றி உள்ளத்தைப் புடம்போட்டு உணர்வுகளுக்கு உயிரூட்டி மிகச் சிறந்த செயற்பாடுகளின் பால் வழிகாட்டும் ஆசிரியன்தான் நபித்துவத்தின் வாரிசாவான். நபிகளார் சொன்னார்கள்: "நபிமார்கள் தீனாரையோ திர்ஹமையோ வாரிசுச் சொத்தாக விட்டுச் செல்லவில்லை. அவர்கள் அறிவைத் தான் வாரிசாக விட்டுச் சென்றனர். யார் அதனை எடுத்துக் கொள்கிறாரோ அவர் மிகப் பெரிய பாக்கியத்தைப் பெற்றுவிட்டார்"[20]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவு தூதரின் வாரிசுச் சொத்து

ஒருமுறை அபூஹுரைரா (ரழி) சந்தைக்குள் நுழைந்தபோது மக்கள் கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சில சந்தர்ப்பங்களில் பொய்ச் சத்தியம் செய்துகொண்டும் வியாபாரம் செய்தனர். அவர்களது நோக்கம் உலகைத் தேடிக்கொள்வதாக இருந்தது. அப்போது அவர், "வியாபாரிகளே நீங்கள் இவ்வளவு பலவீனமானவர்களாக இருக்கின்றீர்களே!" என ஆச்சரியமாகக் கேட்டார். அதற்கவர்கள், "அபூஹுரைராவே, ஏன் அவ்வாறு கூறுகின்றீர்" என வினவினர். அதற்கவர், "அங்கே இறைத்தூதருடைய வாரிசுச் சொத்து பங்கிட்டு வழங்கப்படுகிறது. நீங்களோ இங்கிருக்கின்றீர்களே! நீங்கள் சென்று உங்களது பங்கை எடுக்கக்கூடாதா? எனக் கேட்கவே, அது எங்கே? என அவர்கள் கேட்டனர். அதற்கவர், "பள்ளியில் வழங்கப்படுகிறது" எனக் கூற, அவர்கள் விரைந்து சென்று திரும்பி வந்தனர். அபூஹுரைரா (ரழி) கேட்டார்: "உங்களுக்கு என்ன கிடைத்தது? " அதற்கவர்கள் "அபூஹுரைராவே நாங்கள் பள்ளிவாயலினுள் நுழைந்து பார்த்தோம் அங்கு யாதொன்றும் பங்கிடப்பட வில்லையே!!? எனக் கூறினர்.

அபூஹுரைரா (ரழி) கேட்டார்: "நீங்கள் பள்ளிவாயலில் யாரையும் காணவில்லையா? " அதற்கவர்கள், "ஆம் கண்டோம், ஒரு கூட்டத்தினர் தொழுது கொண்டிருந்தனர். இன்னும் சிலர் ஹலால்- ஹறாம் பற்றி கருத்துப் பரிமாறிக் கொண்டிருந்தனர்." எனக் கூறினர். அப்போது அபூஹுரைரா (ரழி) அவர்கள், "உங்களுக்கு நாசம் உண்டாகட்டும். அதுதான் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாரிசுச் சொத்தாகும்."(21) எனக் கூறினார்கள்.

**உண்மையில் வெற்றிகரமிக்க ஆசான் என்பவன் அல்லாஹ்வின் தூதரை வழிகாட்டியாக எடுத்துக் கொள்பவனேயாவான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகத்தின் தேவை: உண்மையான ஆசான்

இன்று இஸ்லாமிய உம்மத்தின் மிகப் பெரும் தேவையாக இருப்பது உண்மையான ஆசிரியன் ஆகும். ஆசிரியனால்தான் உள்ளங்களில் ஈமானையோ அல்லது நாத்திகத்தையோ விதைக்க முடியும். அவரால்தான் நற்பண்பாடுகளையோ அல்லது துர் நடத்தைகளையோ வளர்த்துவிட முடியும். அவரால்தான் சுதந்திரமாகச் சிந்திக்கக் கூடிய மூளைகளை உருவாக்கவும், சிந்தனைச் சிறைப்பட்டவர்களை உருவாக்கவும் முடியும். அதனால்தான் உண்மையான எழுச்சியை உருவாக்க முனைந்தவர்கள் ஆரம்பத்தில் கல்வித்துறையில் கவனத்தைச் செலுத்தினர்.

இந்தியாவைச் சேர்ந்த பிரபல கவிஞர் ஒருவர் குறிப்பிடுகையில், "பிர்அவ்ன் தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொண்டான் பனூ இஸ்ரயீல்களுக்கு அவன் செய்த அநியாயத்தினால் வரலாற்று நெடுகிலும் ஒரு மோசமான பெயரைச் சம்பாதித்துக் கொண்டான். அவன் பனூ இஸ்ரவேலர்களின் ஆண் குழந்தைகளை அறுத்துக் கொன்றுவிட்டு பெண் குழந்தைகளை உயிரோடு விட்டு விட்டுத் தனது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள முனைந்தான். ஆனால் அவன் அவர்களுக்கென்று ஒரு பாடசாலையையோ அல்லது ஒரு கல்லூரியையோ நிறுவி தான் விரும்பும் பாடத்திட்டத்தை அங்கு நடைமுறைப்படுத்தியிருந்தால் இந்தக் கொலைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் தேவையே இல்லாமல் போயிருக்கும். அந்தக் கல்லூரியிலிருந்து அவனுக்குக் கட்டுப்படுகின்ற, அவனது சிந்தனையை ஏற்று நடைமுறைப்படுத்துகின்ற பரம்பரை உருவாகியிருக்கும். ஒரு துளி இரத்தம் சிந்தாமல் இந்தப் புரட்சியை அவனால் மேற்கொண்டிருக்க முடியும்." எனக் குறிப்பிடுகிறார். இது ஒரு யதார்த்தபூர்வமான கூற்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக் கலைத்திட்டத்தில் காலனித்துவத்தின் செல்வாக்கு

காலனித்துவ வாதிகள் இஸ்லாமிய நாடுகளுக்குள் நுழைந்து செய்த வேலை இதுவே. அவர்கள் கல்வித்துறையை ஆக்கிரமித்துத் தமது காய்களை நகர்த்தினர். எகிப்தின் முதலாவது கல்வி ஆலோசகராக இருந்தவர் 'தன்லூப்' என்ற ஒரு பாதிரியாவர். அவர்தான் எகிப்தின் கல்விக் கொள்கையை வகுத்து கலைத் திட்டத்தை வரைந்தவர். பல ஆண்டுகளல்ல பல தசாப்தங்கள் கடந்தும் இன்றுவரை அவரது சிந்தனையின் சுவடுகளை எகிப்திய கல்வித்துறையில் நாம் கண்டு வருகிறோம்.

கல்வி மிகப் பெரும் புரட்சிக் கருவியாகும். ஏனெனில் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றியோ, உமர் (ரழி), அலி (ரழி), அஹ்மத் பின் ஹன்பல் (றஹ்), இப்னு தைமியா (றஹ்), இமாம் கஸ்ஸாலி (றஹ்) போன்றோரைப் பற்றியோ எதுவுமே தெரியாத அதே நேரம், நெப்போலியன் மற்றும் பிரான்ஸியப் புரட்சி பற்றியும் பூக்கோவிச், மேற்குலகு பற்றியும் நன்கு புலமையுள்ள மனிதர்களை உருவாக்குவதற்கு கல்வித்துறைக்கு முடியும். இதுதான் அன்று நடந்தது.

அல் அஸ்ஹர் கலாசாலையில் நாங்கள் நபிகளாரின் வரலாற்றையும், சிலுவைப் போர்களின் வரலாறு உள்ளடங்கலான ஹி. 6ம் நூற்றாண்டு வரையான இஸ்லாமிய வரலாற்றையும் ஒரேயொரு புத்தகத்தில் படித்து முடித்தோம். மறுபுறம் உயர்தரக் கற்கையின் முதலாம் வருடத்தில் கிரேக்கம், ரோமாபுரி, பிர்அவ்னிய ஆட்சிக்காலத்து எகிப்து என்பவற்றோடு சேர்த்து ஏனைய நாடுகளின் வரலாற்றைப் படித்தோம்.

உயர்தரக் கற்கையின் நான்காம் ஐந்தாம் வருடங்களில் ஐரோப்பியரின் எழுச்சி பற்றியும் எமது வீழ்ச்சிக்கால வரலாறு பற்றியும் படித்தோம். அந்தக் காலத்தை அவர்கள் மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் என அறிமுகப்படுத்தினர். ஐரோப்பாவிடம் மாத்திரம்தான் அது மத்திய காலமாக இருந்ததா? எம்மிடத்தில் அவ்வாறிருக்க வில்லையா??..

கற்பனை செய்து பாருங்கள், அல் அஸ்ஹர் கலாசாலையில் நடந்த மாற்றம்தான் இது... ஏனெனில் அங்கு எமக்கு வரலாறு கற்பித்தவர்கள் நான் ஏலவே குறிப்பிட்ட தன்லூபின் வாரிசுகள்; அவரது கல்விக் கொள்கையின் அடிப்படையில் பயிற்றுவிக்கப் பட்டவர்கள். அவ்வாறிருக்கையில் அல் அஸ்ஹர் கலாசாலை எவ்வாறு எகிப்தின் கல்வித்துறையை மாற்றியமைக்கும்??

## ஆசான்: கல்வித்துறையின் அச்சாணி

ஆசிரியர்களை உருவாக்கும் செயற்பாடு மிக மிக முக்கியமான விடயமாகும். கல்வித்துறையில் தவிர்க்க முடியாத கதாபாத்திரமாக ஆசிரியர் விளங்குகின்றார். ஆசிரியரில் மாத்திரம் கல்வித்துறை தங்கியிருப்பதில்லை என்ற கருத்து உண்மைதான். ஏனெனில் கல்வித்துறை எனும்போது ஆசிரியனோடு சேர்த்து கலைத்திட்டம், அதற்குரிய பாடப்புத்தகம், அதைக் கற்கும் மாணவர்கள், இவற்றையெல்லாம் நிர்வகிக்கும் நிருவாகம் என்றொரு பாரிய அமைப்பே எம் கண்முன்னால் வந்து விடுகிறது. எனினும் ஆசானின் வகிபாகம் என்பது இவை அனைத்தையும் விட முதன்மையானதாகும்.

"நீதி என்பது சட்ட வசனத்தில் இல்லை. மாறாக அது நீதிபதியின் உள்ளத்தில்தான் இருக்கிறது" என்ற முதுமொழி இங்கு குறிப்பிடத்தக்கது. ஏனெனில் சிலவேளை சட்டம் கோணலாக இருப்பினும் நீதிபதி நேர்மையானவராக இருப்பார். எனவே அவர் கோணலான அந்த சட்டத்தினூடாகவே நீதியை வழங்கும் ஆற்றல் பெற்றவராக இருப்பர். இங்கு அவரது மனச்சாட்சி முன்னணி வகிக்கும். சட்டத்திற்கும் மனச்சாட்சிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையில் இணக்கம் காண்கின்ற சக்தி அவரிடம் காணப்படும். அவ்வாறுதான் கல்வி என்பது புத்தகத்தோடு மட்டும் மட்டுப் படுத்தப்பட்ட ஒன்றல்ல. அது ஆசிரியரின் ஆளுமையுடன் தொடர்புபட்டது.

## ஆசிரியரின் ஆளுமைதான் கலைத் திட்டத்தின் செயலாற்றுகையைத் தீர்மானிக்கிறது

கல்வி என்பது புத்தகத்தோடு மட்டும் சுருங்கியதல்ல. மாறாக அது ஆசிரியரின் ஆளுமையில் தங்கியுள்ளது. ஏனெனில் திறமையற்ற ஆசிரியர் ஒருவரால் மிகவுமே கவர்ச்சிகமான ஒரு பாடத்தைக் கூட மோசமான ஒரு பாடமாகக் காட்டிவிட முடியும். இங்கு தெளிவாக ஒரு விடயத்தை முன்வைக்க விரும்புகிறேன். நான் கட்டாரில் மார்க்க விவகாரங்களுக்கான நிறுவனத்தின் பணிப்பாளராக இருக்கையில் கட்டார் கல்வி அமைச்சின் பணிப்பின் பேரில் பல புத்தகங்களை எழுதி வெளியிட்டோம். இருபதுக்கு மேற்பட்ட புத்தகங்களின் நூலாக்கக் குழுவில் நானும் உள்ளடங்கியிருந்தேன். இஸ்லாமியக் கல்வி, தத்துவம், தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், தவ்ஹீத், இஸ்லாமிய ஆய்வுகள் என்று பல்துறைசார் நூற்களும் வெளியிடப்பட்டன. எனினும் அந்த நூற்களில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களின் செயலாற்றுகை, அடைவு என்பன அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியரின் ஆளுமையிலேயே தங்கியுள்ளது. ஏனெனில் உயிர்த்துடிப்பற்ற ஓர் ஆசிரியன் உயிர்ப்புள்ள ஒரு நூலின் கருத்துக்களைத் தோல்வியுறச் செய்துவிடுவான், அவற்றைச் சாகடித்துவிடுவான்.

சில ஆசிரியர்களின் கற்பித்தலில் காணப்படும் பலவீனத்தினாலும், அலட்சியப் போக்கினாலும் குறித்த ஒரு பாடப் புத்தகம் உப்புச்சப்பில்லாத ஒன்றாக மாணவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் நோக்கப்பட்டு அவர்களால் அதன் கருத்துக்களை உள்வாங்கிக்கொள்ள முடியாது போய்விடும். மொத்தத்தில் அந்தப் பாடமே கஷ்டமானதாகவும் சலிப்பானதாகவும் அவர்களுக்குத் தோன்றிவிடும். இதனால் அப்பாடத்தையும் அதன் உள்ளடக்கங்களையும் சுருக்கித்தர வேண்டும் என்ற கருத்தை மாணவர்கள் முன்வைப்பர். அவர்களுக்கு முடியுமானவரை அவற்றைச் சுருக்கிச், சுருக்கி இறுதியில் மனனமிடுவதற்கு மாத்திரம் இலகுவாக்கப்பட்ட சில சொற்களின் தொகுதியாக அந்தப் பாடம் மாறிப் போய்விடும்.

இது கற்பித்தலல்ல. ஆசிரியர் என்பவர் கற்பித்தலின் அச்சாணியாக இருக்கிறார். ஓர் ஆசான் தனது அறிவால், ஆளுமையால், உணர்வால், தனது கற்பித்தல் உத்தியால், பாடங்களுக்கான தனது வரவால், மாணவ, மாணவியர் மீது தான் காட்டும் கரிசனையால் சாதிக்க முடியுமான விடயங்கள் ஏராளம்! ஏராளம்! ஆசிரியர் இன்றி கற்பித்தல் செயற்பாடு வெற்றி பெறாது.

## மக்களுக்கு நல்லதைக் கற்பிப்பவரின் சிறப்பு

நாம் இங்கு மானிட வர்க்கத்துக்கு நல்ல விடயங்களைக் கற்பிப்போரைப் பற்றிக் கூற விழைகிறோம். நபிகளார் சொன்னார்கள்: "நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது மலக்குமாரும் வானங்கள் மற்றும் பூமியில் உள்ளோரும் ஏன், புற்றில் இருக்கும் எறும்பும் கடலில் இருக்கும் மீனும் கூட மனிதர்களுக்கு நல்லதைக் கற்பிப்போர் மீது ஸலவாத்துச் சொல்கின்றன."(22)

அவர் கற்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். மலக்குமார் போன்ற உயர்ந்த படைப்புக்களும் சுறா போன்ற கடல் வாழ் உயிரினங்களும் எறும்புகளும் பூச்சிகளும் அவர் மீது ஸலவாத் சொல்கின்றன. அவை எமக்கு விளங்காத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியில் அவருக்காகப் பிரார்த்திக்கின்றன. அவற்றின் மொழியைப் பற்றி அல் குர்ஆன் "எனினும் அவை துதி செய்வதை நீங்கள் உணர்ந்துகொள்ள மாட்டீர்கள்"(23) எனக் கூறுகிறது. இதனால்தான் கற்பித்தல் செயற்பாடு என்பது மிகமிக முக்கிய விடயமாக நோக்கப்படுகிறது. ஆசிரியர் கற்பித்தலில் மூழ்கிப் போகும்போது முழு உலகுமே அவருக்காகப் பிரார்த்திப்பதிலும் அவர் மீது ஸலவாத் சொல்வதிலும் மூழ்கிப்போய் விடுகின்றது.

## மார்க்கத்தை கற்பிப்பதென்பது மார்க்க ரீதியான வழிகாட்டல்களோடு மாத்திரம் சுருங்கிய ஒன்றல்ல.

இதனால்தான் ஓர் ஆசிரியர் மாணவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர் என உரத்துச் சொல்கிறோம். இஸ்லாமிய கல்வியைப் போதிப்பவர் மட்டுமல்ல மற்றப் பாடங்களைக் கற்பிப்போர் அனைவரும் இவ்வாறு மாறலாம். இஸ்லாம் பாட ஆசிரியர் மட்டும்தான் இஸ்லாமியக் கல்வியைப் போதிக்கக் கூடியவர் எனச் சிலர் நினைக்கின்றனர். உண்மை அதுவல்ல. சிலவேளை விஞ்ஞானத்தையோ அல்லது இலக்கியத்தையோ அல்லது மொழியையோ அல்லது வரலாற்றையோ அல்லது அவையல்லாத வேறு எந்தப் பாடத்தையோ போதிக்கின்ற ஒருவரால் கூட இஸ்லாம் பாடத்தைப் போதிக்கின்ற ஆசிரியரை விட அதிகம் சாதிக்க முடியும். அவர்களால் மாணவர்களின் உள்ளங்களில் மார்க்கத்தை வளர்த்துவிட முடியும். ஏனெனில் இஸ்லாம் பாட ஆசிரியரின் பணியே மார்க்கத்தைப் போதிப்பதும் அதன்படி வாழத் தூண்டுவதும் தான். இது அனைவரும் அறிந்த விடயம். ஆனால் பௌதீகவியலையோ, இரசாயனவியலையோ, தாவரவியலையோ, விலங்கியல் அல்லது உயிரியலையோ கற்பிக்கின்ற ஓர் ஆசிரியர் தான் கற்பிக்கின்றபோது மாணவரிடம் நாங்கள் சொல்கின்ற இந்த பௌதீக, இரசாயன, உயிரியல் கோட்பாடுகள் எல்லாமே படைப்பினங்களில் அல்லாஹ் ஏற்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துள்ள விதிகள் என்று சொன்னால் மாணவர்களிடத்தில் அதன் தாக்கம் எவ்வாறிருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

## படைப்பினங்களில் அல்லாஹ் ஏற்படுத்தி வைத்துள்ள விதிகள்

நிச்சயமாக அல்லாஹ் இந்தப் பிரபஞ்சத்தைக் காரணகாரிய விதியின் படியே இயக்குகிறான். பிரபஞ்சம் எதுவித திட்டமிடலுமின்றி தான் விரும்பியவாறு இயங்கிவிட முடியாது. மாறாக அதனை நிர்வகிக்கின்ற விதிகளினதும் நியதிகளினதும் கட்டுக்குள்ளே அது சுருங்கி இருக்கின்றது. இது பற்றி அல்குர்ஆன், "அவ்வாறாயின் அல்லாஹ்வின் விதிமுறையில் யாதொரு மாற்றத்தையும் நீர் காணமாட்டீர்."[24] எனக் கூறுகிறது.

ஆர்க்கிமேட்டின் கோட்பாடாக இருக்கட்டும் வளிமண்டல அமுக்கமாக இருக்கட்டும் அல்லது அவையல்லாத வேறு எந்தவொரு கோட்பாடாக இருக்கட்டும் அவை அனைத்தும் இறைவன் ஏற்படுத்தி வைத்துள்ள பிரபஞ்ச விதிகளாகும். இதனை இலகுவாகவும் தெளிவாகவும் விரிவாகவும் மாணவன் ஆசிரியரிடமிருந்து கற்றுக்கொண்டு விடுவான். மாறாக, உயிருள்ள படைப்பினங்கள் தம்மைத்தாமே தற்காத்துக் கொள்வதற்கான உத்திகளையும் அவற்றைப் பயன்படுத்துவதற்கான ஆற்றலையும் இயற்கைதான் அவற்றுக்கு வழங்குகிறது என அவன் கூறமாட்டான்.

பறவை தன் அலகினால் தன்னைத் தற்காத்துக் கொள்வதும், மீன்கள் தமது வாலினால் தம்மைத் தகவமைத்துக் கொள்வதும், ஏன் சில மீன்கள் மின்சக்தி கொண்டவையாக இருப்பதும் இன்னும் சில மீன்கள் அழகிய தோற்றத்தைப் பெற்றிருப்பதும் இயற்கையின் தேர்வு என்றும் அவன் கூறமாட்டான். மாறாக அல்லாஹ்வே படைப்பினங்களைப் படைத்து அவற்றுக்குள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காப்பு ஆற்றல்களை ஏற்படுத்தி வைத்துள்ளான். அதன்மூலம் ஒவ்வொர் உயிரினமும் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும் என உணர்வுபூர்வமாக அம்மாணவன் சொல்வான்.

ஒவ்வோர் ஆசிரியரும் உள்ளங்களில் ஈமானையும் நல்ல பண்பாடுகளையும் விதைத்து, வளரும் சந்ததியினரிடத்தில் அவர்களுடைய கடமைகளையும் உரிமைகளையும் விளக்கிக் காட்டுகிற பணியைச் செய்வதற்கு ஆற்றல் உள்ளவராகவே இருக்கின்றார். அதனை அவர் எந்தளவு தூரம் செய்கிறார் என்பதில்தான் அவரது வெற்றி தங்கியுள்ளது.

## ஆசிரியர் கருத்தொற்றுமையுடன் செயற்படல்

ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் விடயங்களில் கருத்தொற்றுமையுடன் செயற்பட வேண்டும். இஸ்லாம் பாட ஆசிரியர் ஒன்றைக் கூறிவிட்டுப் போக வரலாற்றுப்பாட ஆசிரியர் அதற்கு மாற்றமான கருத்தைக் கூறிவிட்டுப் போவதாக இருக்கக்கூடாது. கட்டார் பல்கலைக் கழகத்தின் கல்விப் பீடம் நிறுவப்பட்ட ஆரம்ப காலத்திலிருந்து நான் அங்கிருக்கிறேன். அக் காலப் பகுதியில் பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீடங்களிலும் நான் விரிவுரைகள் நடத்திக் கொண்டிருந்தேன். தர்பிய்யா, இஸ்லாமிய நாகரிகம், ஹதீஸ், ஸீரத்துந்நபி (நபிகளாரின் வாழ்வியல்) எனப் பல பாடங்களைப் போதித்துக் கொண்டிருந்தேன். நான் மாணவிகளுக்கு நபிகளாரின் வரலாற்றுப் பாடத்தைக் கற்பித்துக் கொண்டிருக்கும்போது மாணவிகள் சிலர், "மதிப்புக்குரிய விரிவுரையாளர் அவர்களே நீங்கள் ஒன்றைக் கற்பிக்கின்றீர்கள்- வரலாற்றுப்பாட ஆசிரியரோ வேறொன்றைக் கற்பிக்கிறாரே" எனக் கேட்டனர். எனவே நான் வரலாற்றுப்பாட விரிவுரையாளரிடம் சென்று, உண்மையான வரலாறு இவ்வாறிருக்க நீங்கள் அதற்கு மாறான கருத்தை எவ்வாறு சொல்வீர்"? எனக் கேட்டேன். அவர் மிகத் தெளிவாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார்: இவற்றையெல்லாம் கற்பிப்பதற்கு உங்களைப் போன்றவர்களே பொருத்தமானவர்கள். நீங்கள் கூறுகின்றவற்றைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. ஸஹீஹுல் புகாரியையோ ஸஹீஹ் முஸ்லிமையோ நான் படித்ததில்லை. அவ்வாறே ஸஹீஹான ஹதீஸ்கள் பற்றிய அறிவும் எனக்கில்லை...." என்றார்.

அவர் வரலாற்றுப் பாட ஆசிரியர் என்பதால் இமாம் தபரியின் வரலாற்றுக் கிரந்தத்திலிருந்து தனக்கான குறிப்புக்களை எடுத்துக் கொள்பவராக அவர் இருந்தார். எனவே குறித்த ஒரு வரலாற்றுச் சம்பவத்தை அறிவிக்கும் அறிவிப்பாளர் வரிசை நம்பகரமானதா இல்லையா என்பது பற்றிய அறிவு அவரிடம் இருக்கவில்லை. எனவே குறித்த ஒரு வரலாற்றுச் சம்பவத்தை இமாம் தபரி தனது கிரந்தத்தில் எந்தப் பகுதியில் எந்தப் பக்கத்தில் பதிவு செய்துள்ளார் என்று குறிப்பிடுவதோடு அவருடைய கடமை முடிந்துவிடும். அந்தச் செய்தியை உறுதிப்படுத்த இமாம் தபரி என்ன ஆதாரத்தை முன்வைத்துள்ளார் அல்லது என்ன வழிமுறையைக் கையாண்டுள்ளார் என்பது பற்றியெல்லாம் அந்த விரிவுரையாளருக்குத் தெரியாது.

இமாம் தபரியின் கிரந்தத்தைப் பொறுத்தவரை அது ஒரு பிக்ஹுத்துறை சார்ந்த அல்லது ஹலால்-ஹராம் பற்றிப் பேசுகின்ற நூலல்ல. அது ஒரு வரலாற்று நூல். எனவே, அதில் நிறைந்துள்ள எண்ணற்ற சம்பவக் குறிப்புக்களின் அறிவிப்பாளர் வரிசைகளின் நம்பகத் தன்மை குறித்து இமாம் தபரி கூடிய கரிசனை செலுத்தவில்லை என்பதே உண்மை. எனவே குறித்த கிரந்தத்திலிருந்து குறிப்பெடுத்து வழங்கும் அந்த விரிவுரையாளர் ஆதாரபூர்வமற்ற, உண்மை வரலாற்றுக்கு மாற்றமான சில கருத்துக்களைக் கூட கற்பித்து விடுபவராக இருந்தார்.

இங்குதான் ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் விடயங்களில் பூரண தெளிவுடன் ஒருமைப்பாட்டுடன் செயற்பட வேண்டிய தேவை வெகுவாக உணர்த்தப்படுகிறது. இஸ்லாம் பாடத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிக்கின்றவர் அல்லாஹ்தான் படைப்பினங்களைப் படைத்தான் எனக்கூற உயிரியல் பாட ஆசிரியர் டார்வினின் பரிணாமவாதக் கோட்பாட்டை சரியெனப் போதிப்பாராயின் நிலைமை எவ்வாறிருக்கும்? உண்மையில் டார்வினின் பரிணாமவாதத் தத்துவம் ஓர் எடுகோளன்றி வேறில்லை. உயிரியல்துறை சார்ந்த பல அறிஞர்கள் அந்தக் கோட்பாட்டுக்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். டார்வினின் மாணவர்களில் சிலர் கூட அவரது கருத்துக்கு மாற்றுக் கருத்துத் தெரிவித்துள்ளதோடு அதனைப் பரிணாமவாதக் கோட்பாடு என்று அழைக்காமல் நவீன டார்வினியக் கோட்பாடு என்றே அழைத்து (டார்வினுடன் அந்தக் கோட்பாட்டை சுருக்கி) டார்வினின் கருத்தைப் பிழைகண்டுள்ளதோடு மனிதன் எனப்படுபவன் தனித்துவமான ஒரு படைப்பு என்ற கருத்தையம் முன்வைத்துள்ளனர்.

எனவே இதிலிருந்து ஆசிரியர்களுக்கிடையிலான கருத்தொற்றுமையின் அவசியத்தை உணர்ந்துகொள்ள முடியுமாக இருக்கிறது. இல்லாது போனால் சாண் ஏற முழம் சறுக்கும் கதையாக கற்பித்தல் துறை மாறிப்போய்விடும்.

ஒருவர் கட்டிடத்தைக் கட்டிக்கொண்டு செல்ல இன்னொருவர் அதனை இடித்துக்கொண்டு செல்வதென்பதை என்னவென்று சொல்வது?! எல்லோரும் எதிர்பார்க்கின்ற உயரிய இலட்சியங்களை அடைந்துகொள்ள அனைவரும் கைகோர்த்துச் செயற்பட வேண்டும்.

மதிப்புக்குரிய ஆசிரியர்களே இவை இஸ்லாமிய மார்க்கம் ஆசிரியப் பணியை எவ்வாறு நோக்குகிறது என்பது பற்றிய சில பக்கங்களே! ஆசான் என்பவர் நபியின் பணியைச் செய்கின்றார். உள்ளங்களில் உணர்வூட்டி அறிவில் தெளிவூட்டி உணர்வுகளுக்கு உரமிட்டு ஈமானிய வார்ப்பில் வளர்ந்த பூரணமான இஸ்லாமிய ஆளுமையை உருவாக்குவதே அவரது பணியாகும். இதுவே ஒரு ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறே அவர் தனது கற்பித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியைச் சிறந்த முறையில் அமைத்துக் கொள்ளவென சகல விதத்திலும் தன்னைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யுமிடத்து அல்லாஹ்வின் திருப்தியும் மனிதனிடத்தில் நன்மதிப்பும் அவருக்காகக் காத்திருக்கும். அவ்வாறே சிறந்த ஆசிரிய சமூகத்தை உருவாக்கத்தக்க மாணவர்களையும் அவர்களை வடிவமைக்கின்ற கலாசாலைகளையும் உருவாக்குகின்ற பொறுப்பு சமூகத்தைச் சார்ந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ②

# சந்தேகங்களும் தெளிவுகளும்

## 01. ஆசிரியரைக் கண்ணியப்படுத்துவது ஓர் சன்மார்க்கக் கடமை

கேள்வி: மதிப்புக்குரிய ஷெய்க் அவர்களே, "யார் எனக்கு ஓர் எழுத்தையேனும் கற்றுத் தருகிறாரோ நான் அவருக்கு அடிமையாக மாறிவிடுவேன்" என்ற கூற்றை நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இக்கூற்றின் சாரலைக்கூட சமகாலத்தில் எங்களால் கண்டுகொள்ள முடியாமல் இருக்கிறதே. பெரும்பாலான சமூகங்களில் ஆசிரியர்கள் கண்ணியப்படுத்தப் படுவதில்லை; மதிக்கப்படுவதில்லை. அவர்கள் செய்யும் தொழில் ஏளனமாகப் பார்க்கப்படுகிறது. இவற்றுக்கான காரணிகள் எவையாக இருக்கலாம்?

பதில்: ஆசிரியப் பணியின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு சமூகத்தை விட்டும் நீங்கிப் போனமையே இதற்கான மிக முக்கிய காரணியாகும். கவிஞர் ஷௌகீ ஆசிரியரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணியப்படுத்திப் பாடிய பிரபல கவிதை இவ்வாறு அமைகிறது:

ஆசிரியருக்கு எழுந்து மரியாதை செய்திடு
அவர் தூதருக்கு சமமாவார்
உள்ளங்களையும் அறிவாளுமைகளையும்
கட்டியெழுப்புகின்றவர்களை விட உயர்ந்தவர்கள்
யார்தான் உளரோ!

மஹா அலெக்சாண்டர் தனது ஆசிரியரைக் கண்ணியப்படுத்தினார். 'நீ உனது தந்தையைவிட அதிகமாக உனது ஆசானைக் கண்ணியப்படுத்துகிறாயே' என அவரிடம் கூறப்பட்டபோது, "ஆம், அழியும் இந்த உலகில் எனக்கு வாழ்வளித்தவர் எனது தந்தைதான், ஆனால் அழியா உலக வாழ்க்கைக்கு எனக்கு வழிகாட்டியவர் எனது ஆசானே" என அவர் பதிலளித்தார். அதாவது தந்தை எனக்கு அமுதூட்டுகிறார். ஆசான் எனக்கு அறிவூட்டுகிறார். தந்தையோ உடலைப் போஷிக்கிறார், ஆசானோ அறிவைப் போஷிக்கிறார் என்பதே அதன் கருத்து.

மனிதர்கள் விழிப்படைந்து ஆசிரியப் பணியின் மகத்துவத்தை உணரும்போதே ஆசிரியன் தனக்கான உரிமையைப் பெறுவான். ஆயினும், துரதிஷ்டவசமாக ஆசிரியன் பண்பாட்டு ரீதியிலோ பௌதீக ரீதியிலோ எந்த அடிப்படையிலும் தனக்கான உரிமையை இன்றும் சரிவரப் பெறாமலிருக்கிறான்.

குறிப்பிட்ட கால சிறைவாசத்தை அனுபவித்துவிட்டு நான் பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம்பெற்று வெளியேறிய ஆரம்ப காலத்தில் எனக்கென ஒரு வேலையைத் தேடினேன். அந்த வருடம் வெளியாகிய பட்டதாரிகளில் முதலிடத்தைப் பெற்றவனாக நான் இருந்தபோதும் எனக்கு வேலை தரப் பலரும் மறுத்துவிட்டனர். எனவே தனியார் பாடசாலைகளில் தொழில்வாய்ப்பிருக்கிறதா எனத் தேடினேன். தனியார் பாடசாலை நிருவாகிகள் அரபு மொழி கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களைத் தேடினர். நான் அவர்களிடம் சென்றபோது, 'நீங்கள் உஸூலுத்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடத்தில் கற்று பட்டம்பெற்ற பட்டதாரியாக இருக்கின்றீர்கள். எங்களிடத்தில் உஸூலுத்தீன் பீட பட்டதாரிகளுக்கான வேலைவாயப்பு வெற்றிடங்கள் இல்லை' என அவர்கள் கூறிவிட்டனர். ஆனால் நானோ உஸூலுத்தீன் பீடத்திலேயே முதல்தரத்தில் சித்தியடைந்து; கற்பித்தல் துறைசார்ந்த விஷேட கற்கை நெறியிலும் முதல்நிலையில் சித்தியடைந்திருந்தும் அவர்கள் அவற்றைப் பொருட்படுத்தவில்லை.

நான் எனது சகபாடிகளிடம் சுவாரஸ்யமாகச் சொல்வதுண்டு, "மனிதர்களில் மிகவும் பரிதாபத்துக்குரியவர்கள் உத்தியோ கத்தர்கள்; உத்தியோகத்தர்களிலேயே மிகவும் பரிதாபத்துக் குரியவர்கள் ஆசிரியர்கள்; அவர்களில் மிகவும் பரிதாபத்துக் குரியவர்கள் அரபு மொழி மற்றும் இஸ்லாம் பாடத்தைப் போதிப்ப வர்கள். அவர்களிலும் மிகவும் பரிதாபத்துக்குரியவர்கள் அரபுக் கல்லூரிகளிலும், ஷரீஆத் துறைப் பீடத்திலும் கற்றுவிட்டு வந்து ஆசிரியப் பணி புரிபவர்கள்" என்று கூறுவேன்!!

உண்மையில் ஆசிரியர்களுக்குரிய இடம் சமூகத்தில் சரியாக வழங்கப்படுவதில்லை. இதனால்தான் அதிகமான இளைஞர்கள் கற்பித்தல் துறையை வெறுக்கின்றனர். கட்டாரைப் பொறுத்தவரையில் அங்கு கல்விப் பீடத்தில் கற்று வெளியேறு கின்ற மாணவர்கள் கூட ஆசிரியப் பணி புரிவதில்லை. ஆசிரியத் தொழிலைத் தவிர மற்றெந்த தொழிலைச் செய்வோரும் தனது தொழிலைச் செய்கையில் இடைநடுவில் வேறொரு வேலையைச் செய்ய முடியும். ஒரு காரியாலயத்தில் பணிபுரியும் ஒருவர் நேரத்தை வீணடித்துவிட்டு தனது சொந்த வேலைகளைச் செய்வதென்பது சில வேளைகளிலல்ல பல சந்தர்ப்பங்களில் இடம் பெறுகிறது. ஆனால் ஒரு ஆசிரியரைப் பொறுத்தவரையில் இது சாத்தியமாகுமா? அவர் பாடசாலையில் பணிநேரத்தில் வேறு வேலை செய்துவிட முடியாதல்லவா? அதனால்தான் பல கல்வித்துறைப் பட்டதாரிகள் கூட ஆசிரியத் தொழிலைப் புறக்கணிக்கின்றனர். கற்பித்தல் என்பது மிக முக்கிய பணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் பலர் அதனை வெறுக்கின்றனர். இன்னும் சிலரோ தமது நடத்தையாலும் பண்பாடுகளாலும் கல்வித்துறையை மாசுபடுத்துகிறார்கள். கல்வித்துறை தவிர்ந்த ஏனைய தொழிற் துறைகளிலும் நல்லவர்களோடு சேர்ந்த கெட்டவர்களும் இருப்பது சர்வ சாதாரணமாகிவிட்டது.

## அல்குர்ஆன் ஆசானைக் கண்ணியப்படுத்துமாறு தூண்டுகிறது

**கேள்வி:** ஆசிரியப் பணியின் மகத்துவம் பற்றிக் குறிப்பிட்ட நீங்கள் உங்கள் கருத்துக்கு ஆதரவாக ஒரு கவிதையைத்தானே குறிப்பிடுகிறீர்கள். இதைப்பற்றி அல்குர்ஆன் என்ன குறிப்பிடுகிறது என்பதைச் சுட்டிக்காட்டவில்லையே?

**பதில்:** ஆசிரியப் பணியின் மகத்துவம் பற்றிய அல்குர்ஆனிய வசனங்களை ஏலவே குறிப்பிட்டுவிட்டேன். அல்குர்ஆன் அறிவூட்டலையும் உள்ளத்தைச் சீபடுத்துவதையும் இறைத்தூதரின் ஏக பணியாக முன்வைக்கிறது. இதைவிட வேறு எந்த ஆதாரத்தை முன்வைக்கக் கோருகிறீர்கள்?

அல்லாஹுத் தஆலா நபகளாரின் பணி குறித்து அல் குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்: "... ஆனால் அவர் (பிற மனிதர்களிடம்) 'நீங்கள் வேதத்தைக் கற்றுக் கொடுத்துக் கொண்டும் அ(வ்வேதத்)தை நீங்கள் ஓதிக்கொண்டும் இருப்பதனால் ரப்பானீ[25] (இறைவனை வணங்கி அவனையே சார்ந்திருப்போர்)களாகி விடுங்கள் (என்றுதான் கூறுவார்)"

ரப்பானி என்பவர் ஆரம்பத்தில் தானும் கற்று அதனை அமுல்படுத்தி, தான் கற்றதைப் பிறருக்கு கற்றுக் கொடுப்பவர் ஆவார். கற்றல், நடைமுறைப்படுத்தல், கற்பித்தல் என்ற இந்த மூன்று அம்சங்களும் யாரிடத்தில் ஒன்றுசேர்கின்றனவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்தான் ரப்பானீ ஆவார். இதனால்தான் ஈஸா (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "யார் ஒருவர் தானும் கற்று, தான் கற்றவற்றை நடைமுறைப்படுத்தி, அவற்றைப் பிறருக்கு கற்றுக் கொடுக்கிறாரோ அவர் வானலோகத்தில் கண்ணியமாக அழைக்கப்படுவார்.[26]) அறிவிப்பாளர்: தௌர் அல்ஹிம்ஸி. நூல்: ஹில்யா 93-6

இங்கு அல்குர்ஆன், "நீங்கள் வேதத்தைக் கற்பிப்பதனூடாக..." என்ற வார்த்தைப் பிரயோகத்தை கையாண்டுள்ளமை அவதானிக்கத் தக்கது. அவ்வாறே இன்னுமோரிடத்தில், "....ஆனால் அவர்களில் ஒவ்வொரு வர்க்கத்தாரிலிருந்தும் ஒரு சிறிய கூட்டத்தார் சன்மார்க்கத்தை (ஞானத்தை) கற்றுக் கொள்வதற்காகவும், (வெளியேறிச் சென்ற அவர்கள் பின்னே தங்கியவர்களிடம்) திரும்பி வந்து அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவும் புறப்பட வேண்டாமா? இதைக் கொண்டே அவர்கள் தங்களைத் (தீமையினின்றும்) பாதுகாத்துக் கொள்வார்கள்"[27] எனக்கூறுகிறது.

உண்மையில் அச்சமூட்டி எச்சரிக்கை விடுக்கும் செயற்பாடு என்பது ஒரு வகையான கற்பித்தல் அணுகுமுறையே. ஏனெனில் கற்பித்தல் என்ற செயற்பாடு நன்மாராயம் கூறுவதையும் எச்சரிக்கின்ற செயற்பாட்டையும் இணைத்த ஒன்றாகவே நோக்கப்படுகின்றது. இதற்கான ஆதாரங்கள் அல்குர்ஆனில் விரவிக் காணப்படுகின்றன. ஸுன்னாவும் இதைப் பற்றி நிறையவே பேசியுள்ளது. நான் ஏலவே குறிப்பிட்டது போல, "வானில் உள்ள படைப்புகளும் பூமியிலுள்ள படைப்பினங்களும் மனிதர்களுக்கு நல்லதைக் கற்பிப்பவர் மீது ஸலவாத் சொல்கின்றன என நபிகளார் கூறிச் சென்றுள்ளார்கள். அதே போன்று உஸ்மான் பின் அப்பாஸ் (ரழி)யின் வாயிலாக இமாம் புஹாரி (ரஹ்) அறிவிக்கும் ஹதீஸ் பின்வருமாறு அமைகிறது: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் " அல்குர்ஆனைத் தானும் கற்று பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே உங்களில் சிறந்தவராவார்"[28]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல அல்குர்ஆனிய, ஸுன்னா வாசகங்கள் கற்பித்தல் பணியின் மகத்துவத்தைப் பறைசாற்றுகின்றன.

## இஜ்திஹாதின் வாயில் திறந்துதான் இருக்கிறது

**கேள்வி:** இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டது ஏன்? அதனை மீண்டும் திறக்கும் அதிகாரம் யாருடைய கையிலுள்ளது?

**பதில்:** இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டுவிட்டது என்று கூறியது யார்? அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் திறந்துவைத்த இஜ்திஹாதின் வாயிலை மூடுவதற்கு யாருக்குத்தான் அதிகாரம் இருக்க முடியும்?! இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டுவிட்டது என்ற கூற்று ஆதாரபூர்வமான வழிமுறை ஒன்றின் மூலம் வந்த செய்தியொன்றல்ல. ஏதாவதொரு மாநாடு கூட்டப்பட்டு அதில் நாம் இஜ்திஹாதின் வாயிலை மூடிவிடுகிறோம் என யாராவது அறிவித்தார்களா? அவ்வாறு ஏதாவது மாநாடு கூட்டப்பட்டிருந்தால் அதனை ஏற்பாடு செய்தவர்கள் யார்? முஜ்தஹித்களா அல்லது முஜ்தஹித்களைப் பின்பற்றுகின்ற சாதாரண பாமரர்களா? முஜ்தஹித்கள்தான் மாநாட்டைக் கூட்டி அவ்வாறு அறிவித்திருப்பார்களாயின் அது அவர்களால் இயலாத காரியமாகும். ஏனெனில் அவர்கள் முஜ்தஹித்கள். அவர்களது செயற்பாடே இஜ்திஹாத் செய்வதன்றி வேறில்லை. அதனால் தான் அவர்களுக்கு அந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மாறாக இந்த அறிவிப்பை விடுத்தது முஜ்தஹித்கள் அல்லாத பாமரர்களாக இருப்பின் அவர்களது கூற்று ஏற்கக்கூடியதல்ல. ஏனெனில் (அறிஞர்கள் இருக்கையில்) பாமரனின் (முகல்லித்) கூற்று ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. முகல்லித் என்று சொல்லப்படக்கூடிய பாமரன் ஓர் அறிஞன் இல்லை என்பதே அதற்கான காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருவரைக் (கண்மூடித்தனமாக)ப் பின்பற்றுவதென்பது (தக்லீத்) அறிவாகக் கருதப்பட மாட்டாது என்பதே அறிஞர்களின் ஏகோபித்த முடிவாகும். ஏனெனில் ஆதாரங்களின் துணை கொண்டு சத்தியத்தை அறிவதே அறிவாகும். சரியானதா அல்லது பிழையானதா என்று தெரியாமல் இன்னொருவருடைய கருத்தை ஏற்றுக்கொள்பவர் அறிஞராகக் கருதப்பட மாட்டார். இதனால்தான் நாம் உறுதியாகக் கூறுகிறோம்: இஜ்திஹாதின் வாயில் நன்றாகத் திறக்கப்பட்டுத்தான் இருக்கிறது; மூடப்படவில்லை. இனிவரும் காலத்திலும் அது திறக்கப்பட்ட தாகவே இருக்கும்.

கடந்த காலங்களை விட நவீன காலத்தில் இஜ்திஹாத் செய்வதென்பது இலகுவாகிப் போயுள்ளது. கடந்தகால அறிஞர்களுக்கு கிடைக்கப்பெறாத வசதிகளும் வாய்ப்புக்களும் தற்கால அறிஞர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளமையே அதற்குக் காரணமாகும்.

உதாரணமாகக் கூறுவதாயின், ஆரம்பகாலங்களில் நான் ஏதாவதொரு நூலின் ஓரிரு பக்கங்களைப் பிரதிபண்ண வேண்டுமாக இருந்தால் அவற்றை இன்னொரு குறிப்புப் புத்தகத்தில் ஒவ்வொரு எழுத்தாக எழுதிப் பிரதி செய்வேன். எழுதி எழுதியே எனது விரல்கள் வீங்கிப் போய்விடும். ஆனால் இன்று எனக்குத் தேவையான பகுதிகளை ஒரு நொடியில் பல்வேறுபட்ட வழிமுறைகளில் பிரதிபண்ணிக்கொள்ள முடியுமாக இருக்கிறது.

மாத்திரமல்லாது தற்காலத்தில் திறனாய்வு செய்யப்பட்ட நூல்களும் தலைப்புகள் அகர வரிசைப்படி அட்டவணைப் படுத்தப்பட்ட நூல்களும் எமக்குக் கிடைக்கப் பெறுகின்றன. எம்மிடம் கணனி இருக்கிறது... எனவே இது போன்ற காரணிகளால் தற்காலத்தில் இஜ்திஹாத் செய்வதானது கடந்த காலங்களை விட இலகுவானதாக மாறிப் போயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களும் இளவயதுத் திருமணமும்

கேள்வி: பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்வதற்காக வேண்டி சில பெண்கள் திருமணம் முடிக்க மறுக்கிறார்களே! அவர்களைப் பற்றிய உங்களது அபிப்பிராயம் என்ன?

பதில்: இது அவர்களுடைய தனிப்பட்ட விவகாரம். பெண்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய தனிப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு மிகப் பொருத்தமான தெரிவை மேற்கொள்வதற்கான உரிமை அவர்களுக்குண்டு. ஒரு பெண் நல்ல திறமைசாலியாக இருக்கின்ற நிலையில் திருமணம் என்பது அவளது கற்றலுக்குத் தடையாக அமையுமானால் அவள் படிப்பைத் தொடர்வதே சிறந்தது என்பது எனது கருத்து. எனினும் அவளுக்குப் பொருத்தமான முடிவை அவள்தான் எடுக்க வேண்டும்.

மாறாக, கல்வியானது தனது திருமணத்துக்கு தடையாக அமைந்துவிடுமோ என அவள் பயந்தால் அவள் கல்வியை விட்டுவிட்டு திருமணம் என்ற தெரிவை மேற்கொள்வதே மிகச் சிறந்ததாக அமையும். எனவே ஒவ்வொரு யுவதியும் தனது சூழ்நிலைக்கு எது பொருத்தமானது என்பதைக் கவனித்துப் பார்த்து தெரிவை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு முஸ்லிம் எப்போதும் தனக்கு மிக முக்கியமானது எது, தான் முன்னுரிமைப்படுத்த வேண்டிய விடயம் எது என்பதைக் கவனித்துச் செயற்படுவான். அவ்வாறே, எல்லா வரன்களையும் தட்டிக்கழித்துவிடவும் முடியாது. ஏனெனில் சிலவேளை நல்ல மார்க்கப்பற்றுள்ள ஒரு மணமகனை கை நழுவவிடுவதும் வரவேற்கத்தக்கதல்ல. அவ்வாறே தட்டிக்கழிக்க வேண்டிய வரன் விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டியதும் அவசியமாகும்.

தமது மனைவியரின் கல்விக்குத் தூண்டுதல் அளிக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில ஆண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதற்கு முற்றிலும் நேர்மாற்றமான நிலைப்பாட்டுடன் பெண்களை வீட்டிலிருந்து வெளியேறவிடாமல் தடுப்புக்காவலில் வைத்திருக்கக் கூடியவர்களும் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். எனவே இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு பெண்கள் தமக்கான பாதையைத் தெரிவுசெய்து கொள்ள வேண்டும்.

3

# மரம் வளர்ப்போம்: மனிதம் காப்போம்

**கேள்வி:** நான் எனது குடும்பத்துடன் ஒரு வீட்டில் வசித்து வந்தேன். அங்கு வாழ்ந்த காலத்தில் எனது தந்தைக்கு விவசாயம் செய்வதில் அலாதியான ஈடுபாடு இருந்தது. பதினைந்து வருடங்கள் கழிந்த பின்னர் நாங்கள் அந்த வீட்டைக் காலி செய்துவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது பயிர்பச்சைகளையும், மரம்,செடி,கொடிகளையும் அங்கேயே விட்டுவிட்டு வரவேண்டியேற்பட்டது. அப்போது எனது தந்தை அத்தாவரங்களை அழித்துவிட விரும்பவில்லை. ஏனெனில், "எந்தவொரு முஸ்லிம் ஒரு பயிரை நட்டி அதிலிருந்து ஒரு பறவையோ அல்லது ஒரு மனிதனோ அல்லது ஒரு விலங்கினமோ சாப்பிட்டால் அது அவருக்கு ஸதகாவாக அமைந்துவிடும்"[29] என்ற நபி மொழியின் கூற்றினால் அவர் கடுமையாக ஆகர்ஷிக்கப்பட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் எமக்குப் பிறகு அந்த வீட்டில் குடியேறியவர் மரங்களுக்கு நீர் பாயும் வழியைத் துண்டித்துவிடவே அவை காய்ந்து சருகாகின. பிறகு அவர் அவற்றை வெட்டி எறிந்து விட்டார். அந்த மரங்களால் தனக்கோ மற்ற அயலாருக்கோ அல்லது வேறு எவருக்குமோ எதுவிதமான பாதிப்போ இடைஞ்சலோ ஏற்படப்போவதில்லை என நன்கு தெரிந்திருந்தும் அவர் இந்த கைங்கரியத்தைச் செய்துவிட்டார். இந்த மனிதனின் செயற்பாட்டைப் பற்றி நீங்கள் யாது கூற விரும்புகிறீர்கள்.?

பதில்: உங்களது தந்தை செய்த இந்த வேலைக்காக அவர் பாராட்டப்பட வேண்டியவர். அவருக்கு அதற்கான கூலி உண்டு. ஆனால் மரங்களுக்கான நீரை மறித்து அவை இறக்கக் காரணமாக இருந்ததோடு எந்தத் தேவையுமின்றி அவற்றை வெட்டி வீழ்த்திய அந்த மனிதன்- அவன் வெட்டிய அளவு- இந்தப் பூமியில் குழப்பம் செய்துவிட்டான். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் இலந்தை மரம் ஒன்றை வெட்டிவிடுகிறாரோ அவரை அல்லாஹ் நரகிலே தலைகீழாகப் போட்டுவிடுவான்"(30)

ஒரு நிலப்பரப்பில் ஒரு இலந்தை மரமிருக்க அதனை ஒருவன் வெட்டிவிடுவானாயின் அல்லாஹ் அவனைத் தலைகீழாக நரகில் வீசிவிடுவான். இங்கு இலந்தை மரம் என குறிப்பிட்டுள்ளதை விளக்குகின்ற சில அறிஞர்கள் நபிகளார் இந்த வார்த்தைப் பிரயோகத்தினூடாக பெறுமதிமிக்க, பிரயோசனமிக்க மரங்களை குறிக்க நாடியிருப்பார் எனக் கூறுவர். ஆனால் ஒருவர் எவ்வித தேவையுமின்றி எந்தவொரு மரத்தை யேனும் வெட்டி அதிலிருந்து கிடைக்கும் பயனை மனிதர்கள் பெறாமல் தடுத்துவிடுகிறார் என்றால் நிச்சயமாக அவர் செய்வது ஒரு பாவச் செயலே என்பதே எனது நிலைப்பாடாகும்.

இஸ்லாம் பயிரிட்டு வளப்படுத்துவதைத் தூண்டுகிறது. முஸ்லிம்கள் சூழலைப் பேணிப் பராமரித்து பசுமைப்புரட்சி செய்ய வேண்டும் என்று அது விரும்புகிறது. தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவிலும் ஏனைய சில நாடுகளிலும் 'பசுமைக் குழுமங்கள்' எனப்படும் அமைப்புக்கள் தோன்றி பசுமைப் புரட்சி செய்ய முயற்சித்து வருகின்றன. பசுமைதான் மகிழ்சிகரமான வாழ்வின் அடிநாதம். மரங்களை வெட்டுவதானது அந்த அடிநாதத்தையே அறுத்து சூழலை மாசுபடுத்திவிடும் என்று அவர்கள் கருதிச் செயற்படுகிறார்கள். எனவே அவர்கள் சூழலின் நண்பர்கள்; பசுமையின் தோழர்கள்.

இஸ்லாம் அவர்களுக்கெல்லாம் எத்தனையோ நூற்றாண்டு களுக்கு முன்பிருந்தே இந்தக் கோஷத்தை எழுப்பிவருகிறது. எவ்வித தேவைப்பாடுமின்றி மரத்தை வெட்டுவதை அது தடுத்து ஹராமாக்கியிருக்கிறது. இவ்வாறெல்லாம் இருக்கின்றபோதிலும் அந்த நாசகார செயலை செய்த மனிதனின் நடத்தையானது அவனை விட்டும் இஸ்லாமிய உணர்வு மட்டுமல்ல அழகியல் உணர்வே நீங்கிப் போயுள்ளமையைத்தான் சுட்டிக் காட்டுகிறது.

பண்டைக் காலத்திலிருந்தே மக்கள் சொல்லி வருகின்ற ஒரு உண்மை இருக்கிறது: மூன்று விடயங்கள் கவலையைப் போக்கிவிடும். நீர், பசுமை, அழகிய முகம் என்பனவே அவையாகும்.

எதுவித காரணமுமின்றி மரங்களை வெட்ட முனைந்த அந்த மனிதன் தனக்கு அழகியல் உணர்வே இல்லை என்பதை நிரூபித்துவிட்டான். நீ எதுவித முயற்சியும் செய்யாத நிலையில் அல்லாஹ் உனக்கு ஒரு அன்பளிப்பைத் தருகிறான். அந்த அன்பளிப்பைப் பராமரிப்பதற்காக நீ எதுவித சிரத்தைப் படவுமில்லை. பிறர்தான் அதற்காக உழைத்திருக்கின்றார்கள் என்றிருக்க, நீ அந்த அருளை, அன்பளிப்பை வெட்டி வீழ்த்து கிறாய் என்றால் உன்னை என்னவென்று சொல்வது?!

கேள்விகேட்ட சகோதரி இதனைத்தான் நாடியிருப்பார் என நினைக்கிறேன். அந்த ஏழைத் தந்தை தனது பிள்ளைகளை வளர்த்துப் பராமரிப்பது போல மரங்களை வளர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்கையில் அவற்றை வெட்டி வீழ்த்திய அந்த சந்தர்ப்பம் எவ்வளவு அகோரமானதாகவும் கவலைக்கிடமானதாகவும் இருந்திருக்கும். ஜாஹிலிய்யாக்காலத்தில் பிள்ளைகள் அநியாயமாகக் கொல்லப்பட்டதை அல்குர்ஆன் இவ்வாறு சொல்லிச் செல்கிறது: "உயிருடன் புதைக்கப்பட்ட பெண்குழந்தை வினவப்படும்போது, "அது எந்தக் குற்றத்திற்காக கொல்லப் பட்டது? என்று"[31]

இதுபோன்ற ஒரு கவலைக்கிடமான மனோ நிலையைத்தான் மரங்களைப் பராமரித்து வளர்த்த அந்த ஏழைத் தந்தையும் அனுபவித்திருப்பார். உண்மைதான், உணர்வுள்ள ஒரு மனிதனுக்கும் உணர்வற்று சடமாகிப்போன ஒரு முட்டாளுக்கு மிடையில் இருக்கும் வித்தியாசம் அலாதியானது. அல்லாஹ்வே எம் அனைவரையும் அத்தகைய முட்டாள்தனத்திலிருந்து பாதுகாக்க வேண்டும்.

**கேள்வி:** ஓரிடத்திலுள்ள மரங்களை வெட்டி வீழ்த்திவிட்டு வேறு மரங்களை நாட்ட விழைபவரும் தவறிழைத்தவராகக் கருதப்படுவாரா?

பதில்: இல்லை, மரங்களை வெட்டிவிட்டு அவ்விடத்தில் வேறு மரங்களை நடுவதற்கு ஒருவர் திட்டமிட்டிருந்தால் அத்தகைய நல்ல நோக்கங்கள் தவறாக நோக்கப்பட மாட்டாது. ஒரு மனிதனுக்கு தனது தோட்டத்தைத் திட்டமிட்டுப் பராமரிப்ப தற்கான பூரண உரிமை உண்டு. அவ்வாறே ஒருவர் ஒரு மரத்தை நட்ட பின்னர் அது தான் விரும்பி எதிர்பார்த்த வகையைச் சார்ந்ததல்ல எனத் தெரியவருகையில் அதனை நீக்கிவிட்டு அவ்விடத்தில் அதைவிடச் சிறந்த வர்க்கத்தை நடுவதில் எதுவித தவறும் இருக்கமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்தியாகத் தாக்குதல்களா? தற்கொலைத் தாக்குதல்களா?

**கேள்வி:** அப்பாவி நிராயுதபாணிகளை இலக்குவைத்து அண்மைக்காலமாக பரவலாக மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்கள் இஸ்லாத்துக்காக மேற்கொள்ளப்படும் உயிர்தியாகத் தாக்குதல்கள்தான் என்று வாதிடுவோருக்கான தக்க பதிலை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

**பதில்:** ஜும்ஆவுடைய குத்பாவிலேயே நான் அதற்கான பதிலை அளித்துவிட்டேன். நீங்கள் அதனைக் கேட்டிருப்பீர்கள் என நினைக்கிறேன். நான் அதிலே தெளிவாகக் கூறிய விடயம் இதுதான்.... இஸ்ரேல்தான் மிகப் பெரிய தீவிரவாதி. உலகிலேயே மிகப் பெரிய தீவிரவாதியாக இருந்துகொண்டு அது தீவிரவாதத்துக்கெதிராகப் போராட நினைக்கிறது.

நான் ஏலவே கூறியதுபோல் அரபு ஊடகத்துறை யூத மயப்படுத்தப்படுகின்றமைத்தான் இப்போதுள்ள பிரச்சினை. யூதர்கள்தான் எமது ஊடகத் துறையை வழிநடாத்துகிறார்கள். அவர்கள்தான் எமது சிந்தனையைக் கட்டுப்படுத்துகிறார்கள். நாமோ அவர்களின் அடிச்சுவடுகளை ஒன்றன்பின் ஒன்றாக மிகக் கவனமாகப் பின்பற்றுகிறோம். நிலைமை இவ்வாறிருக்க இதற்கு அப்பாலும் நாம் என்னதான் கூற இருக்கிறது?!! (எமது ஊடகங்கள் இஸ்ரவேலுக்கு சார்பானதாக அமைந்து உண்மைகளை திரித்து வெளியிடுகின்றன என ஆசிரியர் கூற விழைகிறார்.)

தங்களது உயிர்களை அல்லாஹ்வுக்கு விற்று அல்லாஹ்வோடு அழகிய வியாபாரம் செய்துகொண்ட இளைஞர் கள் மேற்கொண்ட மிகப் பெரிய தியாக நடவடிக்கைகளை குற்றச் செயல்களாக நாம் கருதுவோமாயின்- இஸ்ரவேல் கூறுவது போன்றே நாமும் கூறுவோமாயின்- அதைவிடக் கவலைக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் வேறொன்றுமிருக்க முடியாது. இங்கு கேட்கப்பட்ட கேள்விக்கான பதிலை மிக விரிவாக விளக்கமாக நான் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளேன்.

## இஸ்லாமிய கண்ணோட்டத்தில் அறிவென்பது மார்க்கமாகும்; மார்க்கம் என்பது அறிவாகும்.

**கேள்வி:** ஒரு விரிவுரையின்போது எமது விரிவுரையாளர் அறிவுக்கும் மதத்திற்கும் இடையிலான தொடர்பை விளக்கிச் செல்கையில் பின்வருமாறு ஒரு வரைபை வரைந்தார். அறிவென்பது ஒருபுறத்தில் இருக்கிறது மதம் என்பது இன்னொரு புறத்தில் இருக்கிறது. அறிவு மனிதனின் சொகுசான வாழ்வுக்கு வழியமைத்து அறிவுப் பசிக்கு விருந்தூட்டுகிறது. மதம் நேர்வழியின்பால் மனிதனுக்கு வழிகாட்டுகிறது. அறிவின் ஊற்றுக்கண் மூளையாகும். மதத்தின் ஊற்றுக்கண் இறைவனாகும். அறிவென்பது அனுபவத்தின் சாரமாகும். மதம் என்பது வஹியின் வெளிப்பாடாகும்... இவ்வாறு கூறிக்கொண்டு சென்றவர் இறுதியில் "அறிவியலும் மதமும் வேறுபட்ட இரு துருவங்களாகும்" எனக் கூறி முடித்தார். இந்தக் கூற்று சரிதானா?

**பதில்:** இஸ்லாமிய கண்ணோட்டத்தில் இந்தக் கருத்தானது பூரணமாக மறுதலிக்கப்படக் கூடியதாகும். எம்மிடத்தில் அறிவு என்பது மதமாகும். மதம் என்பது அறிவியலாகும். மேற்கைப் பொறுத்தவரையிலும் அங்குள்ள தேவாலயங்களின் சட்டங்களைப் பொறுத்தவரையிலும் இந்தக் கூற்று சில வேளை பொருத்தமாக இருக்கலாம். மேற்கில் மதம் என்பது வேறு; அறிவியல் என்பது வேறு. அவர்கள் மதத்தையும் அறிவியலையும் முழுக்க முழுக்க வேறுபட்ட இரு விடயங்களாகவே நோக்குகின்றனர். 'நீ (ஏதாவது மதத்தை) நம்பி ஏற்றுக் கொள்வதாயின் உனது கண்களை இறுக மூடிக்கொள்' என்று அவர்கள் கூறுவர். மதநம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது அவர்களது பார்வையில் விஞ்ஞானபூர்வமற்ற, அறிவுபூர்வமற்ற ஒன்றாகும். ஒரு மதத்தை நம்பி ஏற்றுக் கொள்வதை அவர்கள் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகவே கருதுகின்றனர்.

ஆனால் எமது சமூகத்தைச் சேர்ந்த அறிஞர்களோ அறிவு என்பது மதத்தின் அடிப்படை எனக் கூறுவர். அறிவின் துணைகொண்டுதான் நாம் அல்லாஹ்வின் இருப்பை நிறுவுகிறோம். நபித்துவத்தின் சாத்தியப்பாட்டையும் நாம் அறிவின் வெளிச்சத்தில்தான் நிறுவுகிறோம். எங்களது பார்வையில் வஹியானது அறிவின் மூலம்தான் உறுதிப்படுத்தப்படுகிறது. அறிவின் துணையின்றி எந்தவொரு மதமும் பரவி நிலைத்துவிட முடியாது. இதனால்தான் (எமது முன்னோர்) அறிவு மதத்தின் அடிப்படை எனக் கூறினர். அதனால்தான் நாம் கூறுகிறோம்: அறிவியல் என்பது எம்மிடத்தில் மதமாகும். ஏனெனில் அதைத் தேடிக் கற்றுக்கொள்வது முஸ்லிமான ஒவ்வொரு ஆணின் மீதும் பெண்ணின் மீதும் கட்டாயக் கடமையாக இருக்கிறது. அவ்வாறே மதம் என்பது எம்மிடத்தில் அறிவியலாகும். ஏனெனில் மதமானது தெளிவான ஆதாரத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதனைத்தான் அல்குர்ஆன் "நீங்கள் உண்மையாளராக இருப்பின் உங்களது ஆதாரத்தைக் கொண்டுவாருங்கள் என நபியே நீர் கூறுவீராக" எனக் குறிப்பிடுகிறது.

அந்த விரிவுரையாளர் கூறியதாகக் கூறப்படும் செய்தி மறுக்கப்படக் கூடியதாகும். அறிவியலின் பணி அறிவுப் பசியைப் போக்குவதே என்று கூறியதோடு அவர் நின்றிருந்தால் அது பிழையாக இருந்திருக்காது. ஆனால் மதம் என்பது அறிவை மட்டுமல்ல ஆன்மாவையும் உடலையும் சேர்த்து ஏககாலத்தில் போஷித்து சமநிலையான பூரணமான வாழ்வுக்கு வழிகாட்டுகிறது. (என்பதை அறியாமல் பேசியதுதான் அவரின் தவறு)

மேற்கத்தேயத்தில் அறிவியலை வழிநடத்தும் பொறுப்பு பகுத்தறிவிடம் விடப்பட்டுள்ளது; மதத்தைப் போஷிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பு இறைவனிடம் விடப்பட்டுள்ளது. ஆனால் எம்மைப் பொறுத்தவரையில் இறைவனின் வழிகாட்டலில் பகுத்தறிவின் துணையுடன்தான் மத நம்பிக்கை வளர்த்துப் போஷிக்கப்பட முடியும்.

அல்லாஹ்வின் இருப்பை நிறுவுவதற்கு நாம் பகுத்தறிவைத் தான் துணையாகக் கொள்கிறோம். நபித்துவத்தை நிறுவுவதற்குக்கூட பகுத்தறிவைத்தான் நாம் நாடுகிறோம். முஹம்மத் என்பவர் நபி என்பதை நாம் எதன்மூலம் அறிந்தோம்? பகுத்தறிவுதானே எமக்கு வழிகாட்டியது.

பரிசோதனை முறை என்பது பரிசோதனை சார்ந்த அறிவியலுக்குப் பொருந்தும். ஆனால் அனைத்து அறிவியலும் அனுபவம் சார்ந்ததாக, பரிசோதனை சார்ந்ததாக இல்லை. பரிசோதனையின் அடிப்படையில் அமைந்த அறிவியல் இருப்பது போன்றே சிந்தனையின் அடிப்படையில் அமைந்த பகுத்தறிவு சார்ந்த அறிவியலும் இருக்கத்தான் செய்கிறது. இவ்வாறிருக்கின்ற போதிலும் இஸ்லாம் பரிசோதனை முறைமையை அங்கீகரிக்கின்றது. ஒவ்வொருவரும் அவரது துறைசார்ந்த அறிவியலில் தேர்ச்சி பெற்றிருக்க முடியும் என்பதை அது ஏற்றுக்கொள்கிறது.

மதத்தையும் அறிவியலையும் பிரித்துப் பார்க்கின்ற இத்தகைய கருத்துக்கள் இஸ்லாத்தைப் பற்றியோ அதன் கல்விக் கொள்கையைப் பற்றியோ எதுவித தெளிவுமின்றி மேற்கத்தேய சிந்தனை வயப்பட்டுப் போனவர்களால்தான் முன்வைக்கப்படு கின்றன. பல்கலைக்கழக விரிவுரையாளர்களில் அதிகமானோரிடம் காணப்படுகின்ற பிரச்சினையே இதுதான். அவர்களில் அதிக மானோர் இஸ்லாத்தைப் பற்றிய பூரண தெளிவின்றியவர்களாகக் காணப்படுகின்றனர். தனது மதத்தைப் பற்றியோ அல்லது தான் சார்ந்திருக்கும் சமூகத்தாரின் மதத்தைப் பற்றியோ தெளிவான அறிவற்ற ஒருவர் தன்னைப் படித்தவர் என்று எவ்வாறு அழைத்துக்கொள்வார் என்பது ஆச்சரியமானது. அவர் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவராக இருந்தால் கூட தான் வாழ்கின்ற சமூகத்தின் மதத்தைப் பற்றிய தெளிவான அறிவு அவரிடம் இல்லாதிருக்கையில் அவரைப் படித்தவர் என்று சொல்வது உண்மையில் ஆச்சரியமானதே!

## பல் துலக்குவதற்கு கட்டாயம் 'அராக்' குச்சிதான் தேவையா?

கேள்வி: மதிப்புக்குரிய பேராசிரியர் அவர்களே! நீங்கள், "நபிகளாரின் சுன்னாவிற்கான நுழைவாயில்" எனும் உங்களது நூலில் 'இலக்குகளை அடைவதற்கான வழிமுறைகளை மாற்றிக் கொள்ளுதல்' என்றதொரு தலைப்பைக் கொண்டு வருகிறீர்கள். அதிலே "பல் துலக்குவதானது வாயைச் சுத்தப்படுத்துகின்ற அதேவேளை அல்லாஹ்வின் திருப்தியையும் பெற்றுத் தரும்"(32) என்ற ஹதீஸை விளக்கும்போது பற்பசை, பற்தூரிகை என்ப வற்றின் மூலம் பல்துலக்குவது ஆகுமானது என்ற கருத்தைக் குறிப்பிட்டுள்ளீர்கள். இது சுன்னாவுக்கு மாற்றமானதாக அமையாதா?

பதில்: இல்லை, அது சுன்னாவுக்கு மாற்றமானதாக அமையாது. பற்களை சுத்தப்படுத்துதல் என்பதுதான் சுன்னாவாகும். இதுதான் நபிகள் செய்ய நினைத்ததும் செய்து காட்டியதுமாகும். யாரிடம் அராக் மரம் இருக்கிறதோ அவர் அதன் குச்சியால் பல்துலக்கிக்கொள்ள முடியும். ஐரோப்பா, அமெரிக்கா போன்ற அராக் மரம் இல்லாத பகுதிகளில் வாழ்கின்ற ஏனையோர் பற்தூரிகையைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். பல்துலக்குதல் என்ற நோக்கம் நிறைவேற்றப் படுவதுதான் இங்கு முக்கியமாகும். அந்த நூலில் நான் இதைத்தான் சொல்ல விழைந்தேன். ஒரு செயற்பாட்டை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் மாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறலாம். ஆனால் இலக்கும் நோக்கமும் மாறாது நிலைத்தி ருக்கும். பல்துலக்குவதற்கான கருவி கிடைக்காத ஒருவர் தனது விரலின் மூலமாகவேனும் பல்துலக்கிக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை பிக்ஹுத்துறை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.[33] அதாவது அவர் எந்தவொரு பொருளின் மூலமாவது தனது பல்லைத் துலக்கி சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தக் கருத்தைத்தான் நான் அந்த நூலில் கூற விழைகிறேன்.

## அறிவைத் தேடுவோர் அறிவுக்குச் செய்ய வேண்டியவை

**கேள்வி:** ஒரு மாணவன் தான் கற்கின்ற துறைக்கு செய்ய வேண்டிய கடமைகள் என்ன?

**பதில்:** அவர் தான் கற்கின்ற துறையில் முழுக் கவனத்தையும் செலுத்தி தனது நேரத்தையும் காலத்தையும் செலவழித்து முழு மூச்சுடன் முயற்சி செய்ய வேண்டும். எமது முன்னோர்கள் இது பற்றிக் கூறிய கருத்தை இங்கு முன்வைப்பது பொருத்தமெனக் கருதுகிறேன். "நீ கல்விக்கு உன்னை முழுமையாக அர்ப்பணிக்காத போது அதன் சில பகுதியைக் கூட அது உனக்குத் தராது" எனவே ஒருவர் தனது முழு முயற்சியையும் முழு நேரத்தையும் முழுக் கவனத்தையும் அதில் முதலிட வேண்டும். மாறாக ஓய்வு நேரத்தில் மாத்திரம் அமர்ந்துகொண்டு ஏனோதானோவென்று கற்க முனைகின்ற ஒருவர் ஒருபோதும் கற்கப்போவதில்லை. யார் அறிவைக் கற்றுக்கொள்ள விரும்புகிறாரோ அவர் தனது முழுமுதல் முயற்சியையும் அதில் செலவழித்து தனக்கு கற்பிப்போரிடம் பணிவாக நடந்துகொள்ள வேண்டும். இதனைத்தான் ஆரம்பமாகக் கேள்வி கேட்ட சகோதரியும் குறிப்பிட்டார்: "யார் எனக்கு ஒரு எழுத்தையேனும் கற்பிக்கிறாரோ நான் அவருக்கு அடிமையாகிவிட்டேன்." அது போலவே முன்னோரிடத்தில் பின்வருமாறு கூறும் வழக்கமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது: "யார் எனக்கு கற்பிக்கிறாரோ அவரை கண்ணியப் படுத்துவதும் அவருக்கு சங்கை செய்வதும் என்மீது கடமையாகிவிட்டது."

## அல்லாஹ்வுக்கு உவப்பான வழிகளில் நேரத்தைச் செலவழித்தல்

**கேள்வி:** ஒருவன் எவ்வாறு ஷைத்தானுடன் போராடி அல்லாஹ்வுக்கு உவப்பான முறையில் தனது நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்?

பதில்: ஆரம்பத்தில் அல்லாஹ்விடம் அதற்காகப் பிரார்த்திக்க வேண்டும். அதன் பிறகு உள்ளத்தில் திட உறுதி கொள்ள வேண்டும். அதைத் தொடர்ந்து சான்றோரினதும் அறிஞர்களதும் உதவியைப் பெற வேண்டும், நல்ல நண்பர்களுடன் கூட்டுச்சேர வேண்டும். நேரத்தை ஒழுங்கு படுத்திக்கொள்ள வேண்டும். சான்றோரின் சகவாசம் இவை அனைத்துக்கும் வழிகோலுவதாக அமையும்.

## வட்டிசார் வங்கிகளில் வேலை செய்தல்

**கேள்வி:** வட்டிசார் வங்கிகளில் வேலை செய்வது ஆகுமானது என்ற கருத்தை பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் நாள்தோறும் அதிகமாகவே வாசிக்கக் கிடைக்கிறது. வட்டிசார் வங்கிகளில்தான் பொருளாதாரம் தங்கியிருக்கிறது என்ற வாதமும் அதற்குச் சார்பாக முன்வைக்கப்படுகிறது. இது பற்றி...?

**பதில்:** இந்தக் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஏனெனில் மார்க்க அறிஞர்களினால் இக் கூற்று முன்வைக்கப்படவில்லை. மார்க்க ரீதியான சட்டங்களும் சட்டத் தீர்ப்புகளும் மார்க்க அறிஞர்களால்தான் முன்வைக்கப்பட வேண்டும். இதைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆன், "நீங்கள் அறியாதோராக இருந்தால் அறிந்தோரிடம் கேட்டு (தெரிந்து) கொள்ளுங்கள்"[34] எனக் கூறுகிறது. ஆனால் எம்மில் சிலர் மேற்கின் அடிமைகளாக மாறிப்போயுள்ளமை மிகவும் வேதனையளிக்கிறது. அவர்களின் இந்நிலை காரணமாக மேற்கு ஹலாலாக்கியவற்றை எல்லாம் நாமும் ஹலாலாக் வேண்டும் என விரும்புகின்றனர். மேற்கு ஹராமாக்கிக் கொண்டதையெல்லாம் நாமும் ஹராமாக்கிக் கொள்ள வேண்டும் என ஆசிக்கின்றனர். வட்டிசார் வங்கிகள் பற்றிய எமது நிலைப்பாட்டை நாம் தெளிவாகவே முன்வைத்து அந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டோம். எனினும் ஒரு சிலர் மீண்டும் அதைப் பற்றிப் பேசி வட்டியை ஆகுமாக்கக் கூடியவாறான பத்வாக்களை வெளியிட்டு வைத்தனர்.[35]

அல் அஸ்ஹர் கலாசாலையில் அமைந்துள்ள ஆய்வு களுக்கான ஒன்றியம், மக்காவில் அமைந்துள்ள இஸ்லாமிய உலக ஒன்றியத்தின் பிக்ஹு மன்றம், ஜித்தாவில் அமைந்துள்ள இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியம் போன்ற அனைத்து சர்வதேச பிக்ஹு மன்றங்களும் வங்கிகளோடு தொடர்புபட்ட வட்டிகள் தெளிவான ஹராம் என்று பத்வா வழங்கியிருந்தும் அவர்கள் இவ்வாறு தீர்ப்புக் கூறியிருந்தனர். இது விடயத்தில் இஸ்லாமிய நிதி நிறுவனங்களினால் நடத்தப்பட்ட மாநாடுகள் மற்றும் இஸ்லாமிய வங்கிகளைக் கண்காணிக்கும் அமைப்புகள் என்பவற்றின் மூலம் எட்டப்பட்ட தீர்மானங்கள் பற்றியும் அவர்கள் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

## மாணவர்களைத் தண்டிப்பது இஸ்லாமிய வழிமுறையல்ல

கேள்வி: பாடசாலைகளில் மாணவர்களை அடித்துத் தண்டிப்பது பற்றிய உங்களது கருத்து என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்: அடித்தல் என்பது அடிப்படையில் தடுக்கப்பட்ட ஒன்றாகும். அத்துடன் அது இஸ்லாமிய வழிமுறையாகவும் மாட்டாது. நபி (ஸல்) அவர்கள் அடிப்பதை எப்போது ஆகுமாக்கினார்கள் என்பது சிந்திக்கப்பட வேண்டியதாகும். "உங்களது பிள்ளைகளுக்கு ஏழு வயதில் தொழுமாறு ஏவுங்கள். அவர்கள் பத்து வயதாகியும் தொழாவிட்டால் அவர்களுக்கு அடியுங்கள்" (36) என்று ஒரு ஹதீஸ் வந்துள்ளது இந்த ஹதீஸின் அடிப்படையில் பிள்ளைகளுக்கு மூன்று வருட கால அவகாசம் வழங்கப்படுகிறது. அந்தக் காலப் பகுதியில் நாம் அவர்களுக்குத் தொழுகையைக் கற்றுக் கொடுத்து, அதில் ஆசையூட்டி, அவர்கள் தொழும்போது அவர்களைப் பாராட்டுவோம். இவையெல்லாம் செய்த பிறகும்- பத்து வயதாகியும் அவர்கள் தொழாவிட்டால் அவர்களுக்கு அடிப்போம்.

இதனால்தான் பிறந்த நாளைக் கொண்டாடுபவர்களைப் பார்த்து நான் கூறுகிறேன்: நீங்கள் பிறந்த தினத்தைக் கொண்டாடாதீர்கள். மாற்றமாக உங்களது பிள்ளை ஏழுவயதை அடைந்து விட்டால் அதனைக் கொண்டாடி, 'மகனே நீ இப்போது வளர்ந்து பெரியவன் ஆகிவிட்டாய், உனக்குத் தொழுகை கடமையாகிவிட்டது' என்று அவனுக்குச் சொல்லிக் கொடுங்கள்; அவனுக்கு தொழுகையைக் கற்றுக் கொடுங்கள். நீங்கள் தொழும்போது அவனையும் சேர்த்துக் கொள்ளுங்கள். மூன்று வருடங்களின் பின்னர் அவனுக்காக இன்னுமொரு விழாவை ஏற்பாடு செய்து அவனிடம், "இதற்கு முன்னால் நாம் சொன்னபோது நீ தொழுதாய், சிலபோது தொழாமலும் இருந்தாய். அப்போது உனக்கு யாரும் அடிக்கவில்லை. இப்போது நீ வளர்ந்துவிட்டாய். இதன் பிறகு நீ தொழுகையை விட்டால் தண்டிக்கப்படுவாய்" எனக் கூறுங்கள்.

இஸ்லாம் இந்த சந்தர்ப்பத்தில்தான் தண்டிக்க அனுமதிக்கிறது. ஒரு சிறுவன் தான் செய்கின்ற அனைத்து தவறுகளுக்காகவும் தண்டிக்கப்பட முடியாது. மாறாக ஆரம்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சரியான முறையில் வழிகாட்டப்பட வேண்டும். மிகவுமே அரிதான சந்தர்ப்பங்களில்தான் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இஸ்லாம் பெண்களைத் தண்டிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ள போதும் நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை கூறினார்கள்: "உங்களில் சிறந்தவர் தண்டிக்கமாட்டார்"(37) அதாவது சிறந்த ஆண் தனது மனைவியைத் தண்டிக்க மாட்டார். நபி (ஸல்) இன்னுமோர் தடவை கூறுகையில், "அறிந்து கொள்ளுங்கள், உங்களில் ஒருவர் அடிமையைத் தண்டிப்பது போல் தனது மனைவியை அடிக்கக்கூடும். அறிந்து கொள்ளுங்கள், உங்களில் சிறந்தவர் உங்களது மனைவியரிடத்தில் சிறந்தவரேயாவார்"(38) எனக் குறிப்பிட்டார்கள்.

அதாவது சிறந்த, சுதந்திரமான ஒரு ஆடவன் எந்தவொரு பெண்ணையும் அடிப்பது அல்லது தண்டிப்பது என்பது அவனுக்கு பொருத்தமான செயலாக அமையாது. நிர்ப்பந்தமான சூழ்நிலைகளில். மாத்திரம் இது அனுமதிக்கப்படலாம். அடிப்பதற்கான அனுமதி இருப்பதற்காக ஒருவன் தன் மனைவியைத் தடியால் அடிப்பதோ அல்லது பலகை போன்ற ஒன்றால் அடித்து தலையில் காயத்தை ஏற்படுத்துவதோ ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. நபியவர்கள் உம்மு ஸலமா (ரழி)யைப் பார்த்துக் கூறிய வார்த்தைகள் இதனைத் தெளிவாக உணர்த்துகின்றன: "மறுமை நாளில் பழிக்குப் பழி வாங்குவதற்கான சந்தர்ப்பம் இல்லை என்றிருந்தால் இந்த மிஸ்வாக் குச்சியின் மூலம் உன்னை நோவினைப்படுத்தி விடுவேன்"(39) என்றார்கள்.

அடிக்கக் கூடாது என்பதுதான் அடிப்படையாகும். விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் அடிக்க நேரிட்டாலும் மிகவும் மெதுவாகவே அடிக்கலாம். மாணவனை வழிப்படுத்துவதற்கான சகலவித வழிமுறைகளையும் கையாண்ட பிறகுதான் மெதுவாக அடித்தல் என்ற கட்டத்திற்குக் கூட வர முடியும். அந்த சந்தர்ப்பத்தில் கூட அவர் அமைதியான நிலையில் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது தான் அடிக்கலாம். அவர் கோபமாக இருக்கும் நிலையில் அடிக்கக்கூடாது. வெற்றிகரமான சிறந்த ஆசிரியர் தண்டித்தல் என்ற உத்தியை நாடவே மாட்டார்.

## ஊரில் தங்கியிருப்பவர் தொழுகையைச் சேர்த்துத் தொழுதல்

**கேள்வி:** நான் பல்கலைக் கழகத்தில் நடத்துகின்ற விரிவுரையொன்று பி.ப.2.30க்கு ஆரம்பித்து பி.ப. 5.30 மணிக்கு முடிவடைவதாக நேரசூசி வகுக்கப்பட்டிருக்கிறது. ளுஹர் தொழுகையையும் அஸர் தொழுகையையும் சேர்த்துத் தொழுவதற்கு எனக்கு அனுமதி இருக்கிறதா?

**பதில்:** இது அனுமதிக்கப்பட்ட ஒன்றுதான். நபி (ஸல்) அவர்கள் எதுவித பயணமும் செல்லாத நிலையிலும் மழை பொழியாத நேரத்திலும் கூட மதீனாவினுள்ளே இருக்கும் போதே ளுஹர் மற்றும் அஸர் தொழுகைகளையும் ம.்.ரிப் மற்றும் இஷா தொழுகைகளையும் சேர்த்துத் தொழுதுள்ளார்கள். இதனை இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவித்தபோது நாயகம் (ஸல்) ஏன் அவ்வாறு செய்தார்கள் என இப்னு அப்பாஸ் (ரழி)யிடம் வினவப்பட்டது. அதற்கு, "அவர் தனது உம்மத்தினரைக் கஷ்டத்தில் ஆழ்த்தாமல் இருக்க வேண்டும் என நினைத்தே அவ்வாறு செய்தார்" என இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் பதிலளித்தார்.[40]

இங்கு நபியவர்கள், சமூகம் கஷ்டப்படக் கூடாதென்பதை நாடியிருக்கிறார். ஏதாவது கஷ்ட நிலை ஏற்படும்போது ளுஹர் தொழுகையுடைய நேரத்தில் அஸர் தொழுகையை முற்படுத்தி தொழ முடியும். அதில் எதுவித குற்றமும் இருக்காது. எனினும் இரு விரிவுரைகள் தொடர்ந்து அடுத்தடுத்து நடக்கின்ற சந்தர்ப்பத்தில் மாணவிகள் தொழுவதற்கான ஐந்து அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு நிமிடங்கள் இடைவேளை வழங்கப்படுவது அவசியமாகும். அந்த வாய்ப்பு அவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும். அதற்கேற்றாற்போல் அவர்களும் தொழுகைக்கான ஆயத்தங்களை ஏலவே செய்துகொள்ள வேண்டும். அவர்களுடைய பெண் விரிவுரையாளர் அவர்களுக்கு தொழுவிக்கலாம். இதன் மூலம் அவர் மாணவிகளுக்கு முன்மாதிரியாக இருப்பதோடு மாணவிகள் தொழுவதற்கு உதவக்கூடியதாகவும் இருப்பதால் இம் முறைமை மிகவும் பொருத்தமானதாக அமையக்கூடும்.

## உருவச் சிலைகள் தடுக்கப்பட்டவையாகும்

**கேள்வி:** மனித தலை அல்லது மிருகங்களின் உருவங்கள் பொறித்த தங்க ஆபரணங்கள் அணிவது பற்றிய மார்க்கத்தீர்ப்பென்ன?

**பதில்:** முப்பரிமாண அல்லது இரு பரிமாண உருவப் படங்கள் தடுக்கப்பட்டவையாகும். இவற்றை அணிவது முஸ்லிமான பெண்ணுக்கு தகுமானதல்ல. எனினும் அவையல்லாத சாதாரண அமைப்பிலான படங்களாக அவை இருக்கும் பட்டசத்தில் அவற்றை உள்ளடக்கிய அணிகலன்களை அணிவது வெறுக்கத்தக்கதாக இருக்குமேயொழிய ஹராமானதாக இருக்க மாட்டாது என்பதே எனது நிலைப்பாடு. இருபரிமாண அல்லது முப்பரிமாண உருவங்கள் பொறிக்கப்பட்ட அணிகலன்களாக அவை இருந்தால் அவற்றை அணிய முடியாது.

## உனது தந்தைக்குக் கட்டுப்படு, உனது தாய்க்கு மாறு செய்யாதே!

**கேள்வி:** எனது தாய் யன்னலைத் திறக்கச் சொல்கிறாள். எனது தந்தைக்கோ நான் அதனைத் திறப்பது விருப்பமில்லை என்றிருந்தால் நான் எதனைச் செய்வது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்: இமாம் மாலிக் (றஹ்)விடம் ஒருவர் வந்து, எனது தாய் ஒன்றை விரும்ப எனது தந்தை அதற்கு மாற்றமான ஒன்றை விரும்புகிறார். நான் எதைச் செய்ய? எனக் கேட்டபோது, "உனது தந்தைக்குக் கட்டுப்படு உனது தாய்க்கு மாறு செய்யாதே" எனக் கூறினார்.[41] அதாவது எந்த வழிமுறையைக் கையாண்டாயினும் இரு தரப்பையும் திருப்திப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

## யுவதிகள் பல்கலைக்கழகத்தில் வுழூவுடன் இருத்தல்

**கேள்வி:** பல்கலைக்கழக மாணவிகள் வுழூவின் விடயத்தில் அசௌகரியங்களை உணர்கின்றனர். இதுபற்றி..?

பதில்: மாணவியாக இருக்கட்டும் அல்லது பல்கலைக் கழகத்திலோ அல்லது வேறு எந்த இடத்திலோ வேலை செய்கின்றவர்களாக அல்லது வேலை வழங்குபவராக இருக்கட்டும் அவர்கள் அனைவருக்கும் நான் சொல்கின்ற உபதேசம் 'நீங்கள் காலுறைகளை அணியும் முன்னர் வுழூச் செய்து கொள்ளுங்கள். அவ்வாறாயின் நீங்கள் ஸுபஹ் தொழுதுவிட்டு வீட்டிலிருந்து வெளியேறும்போது வுழூவுடன்தான் இருப்பீர்கள்; அதே வுழூவுடன் பல்கலைக்கழகத்திற்கு வருவீர்கள். அங்கு வுழூச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டால் முகம், கைகளைக் கழுவி தலையை மஸ்ஹு செய்வதோடு காலுறைக்கு மேலால் காலையும் மஸ்ஹு செய்வீர்கள். உண்மையில் உங்கள் போன்றவர்களுக்கு வுழூச் செய்வதில் பிரச்சினையான விடயமே காலைக் கழுவுவதுதான்.

ஒரு முறை என்னிடம் ஒருவர் வந்து "வேலைத் தளத்தில் இருக்கும்போது என்னால் தொழ முடியாதிருக்கிறதே" என்று ஆதங்கப்பட்டார். நான் இப்போது கூறியது போலவே அவருக்கும் சொன்னேன். அதற்கவர், "அவ்வாறு செய்வது ஆகுமானதா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கேட்டார். அதற்கு நான் "ஆம்" என்றேன். பிறிதொருநாள் என்னைச் சந்தித்த அவர், "அல்லாஹ் உங்களுக்கு நற்கூலி வழங்கட்டும்" எனக்கு நீங்கள் தொழுகையை இலேசாக்கிக் காட்டிவிட்டீர்கள்." எனக் கூறினார். ஏனெனில் பாதத்தைக் கழுவுவதென்பதுதான் பிரச்சினை. குறிப்பாகக் காற்சட்டை அணிபவர்கள் அதனை மடித்து காலைக் கழுவுவதற்காக அதனை உயர்த்தும்போது சிரமத்தை எதிர்கொள்கின்றனர். அதேநேரம் முகத்தையும் முழங்கைகளையும் கழுவுவதோ தலையை மஸ்ஹு செய்வதோ இலகுவான செயற்பாடுகளாகும். இதனால்தான் அவர் "வுழு என்ற விடயம் எனக்கு மிகவுமே இலேசாக ஆகிவிட்டது" எனக் கூறினார். பல்கலைக்கழகத்தில் உள்ளோரும் இதனைப் போன்று செய்துகொள்ளலாம்.

## யுவதியின் விவகாரங்களுக்குப் பொறுப்பானவர் யார்?

**கேள்வி:** பெண்ணானவள் தன் தாய்க்கும், கணவனுக்கும், சகோதரனுக்கும் கட்டுப்படுவது கடமை என்ற கருத்தை நாங்கள் அதிகமாகவே கேள்விப்பட்டிருக்கிறோம். இவர்கள் அனைவரினதும் கட்டுப்பாட்டிலிருந்து கொண்டு அவளால் எவ்வாறு சமூக முன்னேற்றத்திலும் அபிவிருத்தியிலும் பங்கெடுக்க முடியும்.?!! அவளை அப்பணிகளில் ஈடுபடாமல் தடுக்க அவர்களில் மூவரில் ஒருவர் மட்டுமே போதுமல்லவா? இவ்வாறிருக்க அவள் தான் விரும்பு வதைச் செய்ய எப்போதுதான் சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறது?

**பதில்:** ஒரு பெண் திருமணம் முடிக்காத நிலையில் இருந்தால் அவளைப் பராமரிக்கின்ற முழுப் பொறுப்பும் அவளது தந்தையிடமே இருக்கும். எனவே இந்த சந்தர்ப்பத்தில் அவளது விடயங்களில் முடிவெடுக்கும் உரிமை அவரையே சாரும். மாறாக, அவள் திருமணம் முடித்திருந்தால் அவளது விடயத்தில் தலையிடும் உரிமை அவளது தந்தைக்கோ அல்லது அவளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரனுக்கோ உரியதாக மாட்டாது. அவளது கணவனிடம் தான் முழு உரிமையும் இருக்கும். அவள் தனது கணவனின் முடிவுகளுடன் உடன்பட்டுச் செயற்படுவாள். அவர்களது விவகாரங்களில் அவளது தந்தை தலையிட மாட்டார். ஏனெனில் பெண்ணானவள் திருமணம் முடித்த பின்னர் அவளது முழு விவகாரமும் அவளது கணவனிடமே ஒப்படைக்கப்பட்டு விடும். கணவன் இருக்கையில் அவளது விவகாரங்களில் குடும்பத்தினர் யாரும் தலையிட முடியாது.

## வுழுவின்றிய நிலையில் அல்குர்ஆனை ஓதுதல்

**கேள்வி:** வுழுவின்றிய நிலையில் அல்குர்ஆனை ஓத முடியுமா?

**பதில்:** வுழுவின்றிய நிலையில் அல்குர்ஆன் பிரதியொன்றைப் பிடித்து ஓதாமல் வேறு வழிமுறைகளில் அல்குர்ஆன் ஓதப்படுமானால் அவ்வாறு ஓதுவது ஆகுமான தாகும். ஆனால் வுழுவின்றி அல்குர்ஆன் பிரதியைப் பிடித்து ஓதுவதில் கருத்து வேறுபாடிருக்கிறது. இமாம் ஷௌகானியும் வேறு சிலரும் அல் குர்ஆனை ஓதக் கூடியவர் குளிப்புக் கடமை யாகாத நிலையில் இருந்தால் போதுமானது. (அவர் வுழுவின்றி ஓதுவதில் தவறில்லை) என்ற கருத்தைச் சொல்வர்.[42] அதையும் தாண்டி இமாம் புஹாரி (றஹ்) அவர்கள், ஒரு பெண் மாத விலக்குக் காலப் பகுதியில் கூட அவளால் குர்ஆனை ஓத முடியும் என்ற கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள்.[43]

நானும் இந்தக் கருத்துடன் உடன்படுகிறேன். குறிப்பாக ஒரு மனிதனால் குளிப்பைக் கடமையாக்கும் செயற்பாடு களிலிருந்து அவனது விருப்பத்தின் பேரில் தவிர்ந்து கொள்ள முடியும். ஆனால் ஒரு பெண்ணால் அவளது விருப்பத்தின் பேரில் மாதவிலக்கை விட்டும் தவிர்ந்து கொள்ள முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையில் அவள் மாதவிலக்குக்கு உட்பட்டுள்ள காலத்தில் கூட அவளால் அல்குர்ஆனை ஓத முடியும் என்ற நிலைப்பாடு பெறப்படுகிறது.

## உள்ளத்தில் தோன்றும் எண்ணங்கள், ஊசலாட்டங்கள் பற்றி விசாரிக்கப்படுமா?

கேள்வி: ஒரு மனிதன் அவனது உள்ளத்தில் தோன்றும் எல்லாவித எண்ணங்கள் பற்றியும் விசாரிக்கப்படுவானா?

பதில்: ஆம், விசாரிக்கப்படுவான். அந்த எண்ணம் நல்லதாக இருப்பின் அது நன்மையின் பதிவேட்டில் பதியப்படும்; கெட்டதாக இருப்பின் தீமையின் பதிவேட்டில் பதியப்படும். அந்த எண்ணம் நல்லதாகவோ கெட்டதாகவோ இல்லாமல் பொதுவானதாக இருப்பின் இன்ஷா அல்லாஹ் அதற்கு எதுவித நன்மையும் தீமையும் எழுதப்பட மாட்டாது. எனினும் விசாரணை என வரும்போது அனைத்துவித எண்ணங்களையும் பற்றித்தான் அமைந்திருக்கம். இதுபற்றி அல்குர்ஆன், “உனது இரட்சகன் மீதாணையாக அவர்கள் செய்து கொண்டிருந்த (எல்லாச்) செயல்கள் பற்றியும் அவர்கள் அனைவரிடமும் நாம் விசாரிப்போம்.”[44] எனக் குறிப்பிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்பு

1. அறிவிப்பவர்: அப்துர்ரஹ்மான் அஸ்ஸலமி, நூல் ஆதாபுஸ்ஸுஹ்பா (128வது கூற்று)
2. அல்குர்ஆன் (7:58)
3. அல்குர்ஆன் (4:165)
4. அறிவிப்பவர் அப்துல்லாஹ் பின் அம்ரு, நூல்: இப்னு மாஜா: 229, தாரமீ: 349. இந்த ஹதீஸை இமாம் அல்பானி பலவீனமானதெனக் குறிப்பிடுகிறார்.
5. அறிவிப்பவர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ், நூல் ஸஹீஹ் முஸ்லிம்: 1478, முஸ்னத் அஹ்மத்: 14516
6. அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக், நூல்: ஸஹீஹுல் புகாரி: 69, ஸஹீஹ் முஸ்லிம்: 1734, முஸ்னத் அஹ்மத்: 12,3333, ஸுனனுன் நஸாஈ: 5459
7. அறிவிப்பாளர்: அபூ மூஸா அல் அஷ்அரி, நூல்: ஸஹீஹுல் புகாரி: 3038, ஸஹீஹ் முஸ்லிம் :1733, முஸ்னத் அஹ்மத்: 19742, ஸுனன் அபீதாவூத் : 4355
8. அல்குர்ஆன் (62:2)
9. அல்குர்ஆன் (5:15)
10. அல்குர்ஆன் (42:52)
11. அல்குர்ஆன் (17:24)
12. அல்குர்ஆன் (91:7-10)
13. அல்குர்ஆன் (2:129)
14. அல்குர்ஆன் (2:129)
15. அல்குர்ஆன் (3:164)
16. அல்குர்ஆன் (62:2)
17. நூல்: ஸஹீஹுல் புகாரி: 1597, ஸஹீஹ் முஸ்லிம் :1270, முஸ்னத் அஹ்மத்: 99, ஸுனன் அபீதாவூத் : 1873, ஜாமிஉத் திர்மிதி: 760, ஸுனன் நஸாஈ: 2937
18. அறிவிப்பு : அபூ நயீம், நூல்: ஹில்யதுல் அவ்லியா- 53-1
19. அல்குர்ஆன் (6:153)
20. முஸ்னத் அஹ்மத்: 21715, ஸுனன் அபீதாவூத் : 3641, ஜாமிஉத் திர்மிதி: 2682, ஸுனன் இப்னு மாஜா: 223., இமாம் அல்பானி இந்த ஹதீஸை ஸஹீஹ் எனக் குறிப்பிடுகிறார்.
21. நூல்: தபரானி- 114/2, இந்த அறிவிப்பின் இஸ்னத் ஹஸன் தரத்திலுள்ளதாக இமாம் ஹய்தமீ மஜ்மஉஸ் ஸவாயித் என்ற நூலில் குறிப்பிடுகிறார். அத்தர்கீப் வத்தர்ஹீப் எனும் கிரந்தத்தை ஆய்வுசெய்த இமாம் அல்பானீ இந்த அறிவிப்பு ஹஸன் ம:'கூப் என்ற தரத்திலுள்ளதாகக் குறிப்பிடுகிறார்.
22. அறிவிப்பாளர்: அபூ உமாமா, நூல்: ஜாமிஉத் திர்மிதி : 2685, தபரானி:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

234/8, இமாம் அல்பானீ இந்த ஹதீஸ் ஸஹீஹ் என ஸஹீஹுல் ஜாமிஉ எனும் கிரந்தத்தில் (1838) குறிப்பிடுகிறார்.

23. அல்குர்ஆன் (17:4)
24. அல்குர்ஆன் (35:43)
25. அல்குர்ஆன் (3:79)
26. அறிவிப்பாளர்: தௌர் அல் ஹிம்ஸி, நூல்: ஹில்யதுல் அவ்லியா 93/6
27. அல்குர்ஆன் (9:122)
28. (புஹாரி:5027, அஹ்மத் : 500, அபூதாவூத் 1452, திர்மிதி: 2907, இப்னு மாஜா:211)
29. (புகாரி:2320, முஸ்லிம்:1553, அஹ்மத்: 12495, திர்மிதி:1382 ) அறிவிப்பவர் அனஸ் (ரழி)
30. (அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் ஹுபஷி, அபூதாவூத்:5239, நஸஈ:8587)
31. (அல் குர்ஆன்- 81: 29)
32. (இமாம் புகாரி) 'ஸவ்ம்' என்ற பகுதியில் அறிவிப்பாளர் வரிசையின்றி 'முஅல்லக்' ஆக அறிவிக்கின்றார். அஹ்மத், நஸஈ, இப்னு ஹிப்பான் என்போர் ஆயிஷா (ரழி) வாயிலாக அறிவிக்கிறார்கள்)
33. (பார்க்க: 'பதாவா முஆஸிரா' என்ற நூல், பக்கம்: 329)
34. (அந் நஹ்ல்:43)
35. (எகிப்தின் தலைமை முப்தியான முஹம்மத் ஸையித் தன்தாவி மற்றும் அவருக்கடுத்து அல் அஸ்ஹர் கலாசாலையின் தலைமைத்துவத்திற்கு வந்தவரைக் குறிப்பிடுகிறார்.)
36. (அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அம்ரு, ஆதாரம்: அஹ்மத்: 6756, அபூதாவூத் :495, தாரகுத்னீ: 230-1)
37. (அறிவிப்பவர்: உம்மு குல்தூம் பின்த் அபீபக்கர், நூல்: ஹாதிம்: 191-2)
38. (அறிவிப்பவர்: ஸுபைர் பின் அவ்வாம், நூல்: பஸ்ஸார்: 196-2)
39. (அறிவிப்பவர்: உம்மு ஸலாமா (ரழி), நூல்: அதபுல் முப்ரத்- 184, அபூய'லா 6944, இமாம் பூஸிரி (ரஹ்) இதனுடைய அறிவிப்பாளர் வரிசை பலவீனமானது எனக் குறிப்பிடுகிறார்.)
40. (நூல்: முஸ்லிம்-705, அஹ்மத்- 1953, அபூதாவூத் 1025, திர்மிதி 172, நஸஈ -60).
41. (நூல்: பத்ஹுல் பாரி: 402-10).
42. (பார்க்க: நைலுல் அவ்தார்: 1-259)
43. (பார்க்க: பத்ஹுல் பாரி- 1-414. 297ம் ஹதீஸுக்கான விளக்கவுரை)
44. (அல் ஹிஜ்ர்: 92,93)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கற்பித்தல் பணி என்பது அதற்கேயுரிய முறையில் நிறைவேற்றப்படும் போது அது ஒரு வணக்கமாகவும் அல்லாஹ்வின் பாதையில் மேற்கொள்ளப்படும் ஜிஹாதாகவுமே நோக்கப்படுகிறது.
அறிவில் ஒளியேற்றி உள்ளத்தைப் புடம்போட்டு உணர்வுகளுக்கு உயிரூட்டி மிகச் சிறந்த அமல்களின் -செயற்பாடுகளின்- பால் வழிகாட்டும் ஆசிரியன் தான் நபித்துவத்தின் வாரிசாவான்"

கலாநிதி யூசுப் அல் - கர்ளாவி

இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்
ஜாமிஆ நளீமியா
தபா. பெ : 01
பேருவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org